
1290

# ஜகன்மோகினி

# JAGANMOHINI

1—4—58

25 நயா பைசா




OFFICE OF THE REGISTRAR OF

3 DEC 1958

MADRAS



விரைவில்
வருகிறது
விஜயாவின்
கடன் வாங்கி
கல்யாணம்
டைரக்ஷன்: பிரசாத்
தயாரிப்பு: நாகிரெட்டி & சக்ரபாணி


ஜெமினியின்
மகத்தான
சித்திரம்
வஞ்சிக்கோட்டை
வாலிபன்
ஏப்ரல் 11உ
தமிழ் நாடெங்கும் வெளிவருகிறது



# ஜகன்மோகினி



ஐயுணர்வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து.
—வீரராகவ கவி

ஏப்ரல் 1958. மலர் 35, இதழ் 4. ஏவிளம்பி ஹு பங்குனி மீ

## விஷய அட்டவணை


| | |
|---|---|
| கட்சியார் அரசியல் கைவிடப்பட வேண்டும் —வி. கே. பார்த்தசாரதி | 1 |
| என்னைக் கவர்ந்த காந்தி —கோடிமுடி. ராஜகோபாலன் | 6 |
| பாரதப் பூங்கா —வசுமதி ராமசுவாமி | 9 |
| சொல்லட்டுமா! —ஹாஸ்யநடிகர் L.நாராயணராவ் | 11 |
| ஈர மனம் —டி. எஸ். ராஜகோபாலன் | 14 |
| அவனே கடவுள் —பி. எஸ். அரவிந்தா | 17 |
| காளிதாஸர் கனவு —கே. எஸ் ராமஸ்வாமி சாஸ்திரி | 21 |
| நிவர்த்தி —வை. மு. விஜயலக்ஷ்மி | 26 |
| கிழக்கு வெளுத்தது —வை. மு. கோ. | [61-80] |




ஜெமினியின் மகோன்னதப் படம்
"வஞ்சிக்கோட்டை வாலிப"னில் சுந்தரிபாயும், பத்மினியும்.

1829
சென்னை 600 048

# கட்சியார் அரசியல் கைவிடப்பட வேண்டும்

ஸ்ரீ வி. கே. பார்த்தசாரதி ஐயங்கார், பி.ஏ., பி.எல்.

க்ஷேமலாபமும், சமதர்மமும் லட்சியங்களாகக் கொண்ட, மதப்பற்றற்ற காங்கிரஸ் கட்சியாரது அரசியல் போக்கு, கடந்த பதினோராண்டு அனுபவகாரணமாக, நாட்டின் நலத்தையும், சமூகத்தின் ஒற்றுமையையும் எந்நிலைக்குக் கொணர்ந்துள்ளது என்பதை இன்று நாம் நிர்ணயிக்க வேண்டியது அவசியமாகி விட்டது.

மானிடர் 'மனமே' அவர்கள் 'மதம்.' தன்னைச் சிருஷ்டித்த சக்தியை நினைந்து, அறிந்து, தன் முன்னோர்கள் காட்டிய வழியே நடந்து அதனை அடைந்திட வாழ்க்கை நடத்துவதே மக்களது குலாசாரம். மனோபாவம் குலாசார காரணமாய்ப்பரந்து ஒழுங்குபடுவதுபோல, மானிடர் அறிவும், புத்தியும் அவர்கள் கற்கும் பாஷைகள் காரணமாகவே விசாலமும் சிறப்பும் பெற்று விளங்குவதாகும். இந்தப் பாஷைப் பிரச்சினைதான், இன்று, சுதந்திர இந்திய மக்களை, சச்சரவிடும் ஒற்றுமையற்ற குடும்பத்தினராக்கி வைத்துள்ளது. அந்நிய பாஷையென ஆங்கிலத்தைப் பழித்து, அதனை இந்நாட்டினின்றும் அகற்றிவிடக் கட்சி ஆட்சியினர் முன் வந்திருப்பதுதான் இந்தியக் குடும்பம் பிளவுபட்டிருப்பதின் காரணம். ஆங்கில அரசாட்சி முறைகளை எள்ளளவும் விடாது ஏற்று, ஆங்கில நடையுடை பாவனைகளை மக்கள் கைவிடும்படிக்கான சமூக சீர்திருத்தங்களைக் கடுகளவும் சிந்தியாதிருக்கும் காங்கிரஸ் ஆட்சியினர், இந்தியராகிய நாம், கடந்த நூறுவருடகாலமாக நன்கு பயின்று, பழகி, நம்மதேயாக்கிக்கொண்டிருப்பதும், உலக ஞானமும், அறிவுமெல்லாம் ஆழ மூழ்கிக்கிடப்பதுமான அறிவு வளர்க்கும் உலகப் பொதுப்பாஷையாம் ஆங்கிலப் பாஷையை மட்டும், மறந்து அகற்றவேண்டுமென பிடிவாதம் பிடிப்பது ஏனோ? மேனாட்டார், இந்திய அட்சிப் பொறுப்பைத் தாமே இந்தியர் கைகளில் கொடுத்துப் போனாராயினும், பொருளாதாரத்துறையில், இன்றும் நாம் அம்மேனாட்டாரது அறிவையும் பொருளையும் கடன் கேட்டு நிற்கவேண்டியே யிருக்கிறது. மேனாட்டாரிடம் போய்க் கடன் கேட்கவாவது அவர்களது பாஷையில் நமக்குத் தேர்ச்சியிருக்க வேண்டாமா?

சுதந்திர இந்தியாவுக்குப் பொது பாஷை எது? பிரதேசப் பாஷைகளே ஆங்காங்குத் தாய்ப்பாஷைகளுடன் வளர்ந்துள்ளன வேயொழிய, கடந்த நூற்றுண்டுக்கு மேலாக, இந்தியப் பொது பாஷையென்பது, ஆங்கிலம் தவிர்த்து வேறெதுவுமில்லையே! நமது இந்தியாவில், அப்பதவிக்குரிய வேறெந்த இந்தியப் பொதுப்பாஷையும் இல்லையா? உலகறிந்த ஞானவிஞ்ஞானத்திய சகல சாஸ்திரங்களும், கலைநுட்பங்களும், சம்ஸ்கிருத கிரந்தங்களிலேயே, ஆங்கிலத்தைவிட ஆழ்ந்து பாதிந்திருப்பதாக மேனாட்டறிஞர்கள் உட்படச் சகலரும் ஒப்பிக் கூறிவருகின்றனரே

ஆங்கிலம் கைவிடப்படுமானால், சம்ஸ்கிருதமே யன்றோ அகில இந்தியப் பொதுப்பாஷையாகும் பதவிக்குரியது—அதை விட்டு, அந்தச் சம்ஸ்கிருத லிபியில் எழுதப்படுவதும், அன்னியபாஷையினின்றும் பிறந்து இந்தியப் பாஷைகளிலொன்றாக வளர்ந்து வருவதுமான ஒரு சிறு பிரதேச பாஷையை, அகில இந்தியப் பொதுப்பாஷையாகச் சுமத்துவதால், அரசாங்கத் திறன்தான் அதிகரிக்குமா? சுதந்திர மக்கள் அறிவுதான் அகன்று வளருமா? பிரதேச ஒத்துழைப்புதான் ஏற்படுமா? பிராமணர் என்போரை ஒழித்துப் பிராமணர் அல்லாதாரைக் கொண்டதே தமிழ்நாடென வாதிக்கும் கட்சியினரை இம்மாகாணத்தில் பெருக விட விட்டிருப்பது போலத்தான் உளது, ஆங்கிலம் ஒழித்து ஹிந்தியைப் பொதுப்பாஷையாக்க நமது மத்திய, மாகாண சர்க்கார்கள் செய்யும் முயற்சிகள். சம்ஸ்கிருதமே இந்தியப் பொதுப்பாஷையாகும் நிலைமை வரும் வரையில், சுதந்திர இந்தியாவில் ஆங்கிலமே பொதுப்பாஷையாக நிலவவேண்டியதே நியாயம். இதையெல்லாம் முன்நோக்கியே, தீர்க்கதரிசியான நமது ராஜாஜி, முதிர்ந்த அனுபவத்துடன், 'ஆங்கிலத்தைக் கைவிடாதேயுங்கள்' என இந்திய மக்களை வருக்கும், கல்கத்தா மகாநாட்டிலும் எச்சரிக்கை செய்துள்ளார். அதையும் மீறி, நமது சென்னை மாகாணம், ஹிந்தியை ஏற்று, தமிழில் போதனையமைத்து, படிப்படியாக ஆங்கிலமகற்றும் மத்யஸ்த திட்டத்தை உண்டாக்கியிருப்பதின் காரணமாய், இனி என்னென்ன விளைவுகள் இம் மாகாணத்திலும், நமது இந்தியாவிலும் காணப்போகின்றனவோ! இதன்மத்தியில், இந்தியப் பிரதமர் நேருஜி, ராஜாஜியைப் பகிரங்கமாகப் பழித்துத் தூஷித்து, தென் வடநாட்டுத் துவேஷத் தீயை விசிறிவருவது வருந்தத்தக்கதே. மதமும் பாஷையும் மக்களது பிதிரார்ஜிதங்கள்: அவரவர் குடும்ப வழக்கப்படி அவரவர் இவற்றினை அனுபவிக்க விட்டு, அரசாங்கம் இந்த விஷயங்களில் பிரவேசியாதிருப்பதே க்ஷேமலாப நாடும், சமதர்ம சமூகமும் ஏற்பட வசதியுண்டாக்குவதாயிருக்கும்.

சுயநலப்பற்றற்ற தேசியத் தொண்டியற்றும் காங்கிரஸ் கட்சி, ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள இன்று, இந்தியமக்களனைவரையும் ஒரேநோக்குடன் ஆதரிக்கும் பொதுக்கட்சியாகவன்றோ அதிகாரம் செலுத்தவேண்டும். அதைவிட்டு, காங்கிரஸ் என்ற தனிக் கட்சியினரே பதவிக்கும்,பிரயோசனங்களுக்கும் உரித்தானவரென்ற சுயகட்சிப் பாராட்டல் பான்மையுடன், அக்கட்சியாருக்கே தனிச் சலுகைகள் காட்டி, ஒரு கட்சியையே ஆதரித்தால், முன்னர் நம்மை அடக்கியாண்ட ஆங்கிலக் கட்சியாரது மித்ரபேத ஆட்சிமுறைக்கும், இன்று காங்கிரஸ் கட்சியினருக்கே சலுகைகள் என்று நடந்தேறும் காங்கிரஸ் கட்சியாரது ஆட்சிமுறைக்கும், என்ன வித்யாசம்? ஆங்கில ஆட்சியின் விளைவேயன்றோ இக் காங்கிரஸ் ஆட்சியிலும் இந்தியமக்கள் எதிர்பார்க்க வேண்டிவரும். இதற்கா இவ்வளவு சிரமப்பட்டு நாம் சுதந்திரப் போராடியது? பிசகு, காங்கிரஸ் கொள்கைகளிலல்ல. அவைகள்

மகோன்னதமானவைகளே. திரிகரண சுத்தியுள்ளவர்களே கடைபிடித்தொழுகக்கூடியவை. ஆனால் அக் கொள்கைகளைக் கையாளும் கட்சியாரது மனோவாக்குக் காயத் தூய்மையிலேற் படும் குறைவுகளே இன்று இக்கட்சியில் நாம் காணும் குந்தகங் களுக்குக் காரணமாம்.

கட்சித் தூய்மையில் குற்றமிருப்பது உண்மையாயினும், மக்கள் தூய்மையிலும் குற்றமில்லாமலில்லை. இந்திய மக்கள், தமது பொதுநலனையே நாடி, நாட்டின் க்ஷேமலாபத்திற்காகவே உழைக்க விரும்பும் திறமையும் யோக்யதையுங் கொண்ட, கட்சிப் பற்றற்ற தேசியத் தொண்டர்களையே தமது பிரதிநிதிகளாகச் சபைகளுக்குத் தேர்ந்தெடுக்க உறுதி கொள்வார்களாகில், இக் குறைகள் பலவும் குறைவுபடக்கூடும். ஆனால் அப்படிக்கு அவர்கள் உறுதிகொள்ள முடியாதபடிக்குச் சுயநலப் பதவி தேடுங் கட்சியாளர்கள், பொதுநலப் பசப்புப் பேச்சுக்களால் கட்சிகூட்டி, இவர்களை வஞ்சித்துத் தம் காரியத்தை சாதித்துக் கொண்டு, வாக்காளர்களை வருத்துவதில் முனைந்திருக்குங்கால், குடிகள்மீது குறைகூறி என்பயன்?—தலைவர்களிடை தூய்மை மறைந்தால், மக்களிடை தூய்மை நிலவ வசதிகள் எப்படி ஏற் படக்கூடும்? ஆட்சிக் கட்சியொன்று பொறுப்பேற்றுவிட்டால், இதர கட்சியோர் யாவரும், பொதுநலநோக்குடன் எதிர்ப்புக் கட்சி யாயமைந்தக்காலே நாடு க்ஷேமமடையும்; மக்கள் சுகமடைவர்; சமூகம் சீர்திருந்தும். அதில்லாது, கட்சிப்போட்டியும் போராட் டமும், பதவிக் கட்சிக்குப் பிரத்யேக சலுகைகளுமாக, ஆசை காட்டி மோசஞ்செய்யும் வஞ்சனைவழிகள் அரசியலுலகில் நட மாடி வரும்வரை, உள்நாட்டுக் கலகங்கள் மறையாது மலிந்து பெருகி, நாம் போரர்டிப் பெற்ற பெறற்கரிய சுதந்திரத்தை, நாமறியாமலே நாம் கைவிட்டிழக்க நேரிடவும் கூடுமே!

அரசாங்கத்திற்கு வருமானம் வேண்டியது அவசியந்தான். ஆனால், குடிகளை வருத்தாது, அவர்களுக்கு வருத்தமின்றிக் கிடைக்கும் வருவாயில் சிறியதோர் பகுதி வசூலித்து, அதற் கேற்றாப்போலத் திட்டங்கள் நிறுவி நடத்துங்காலே தர்ம ராஜ்யம் தழைத்தோங்கும். அதுவிட்டு, காங்கிரஸ் கட்சி செய்வ தெல்லாமே எவரும் ஒப்பவேண்டிய தென்ற கொள்கையுடன், வருவாய்க்கு மிஞ்சிய திட்டங்கள் செய்து, குல்லாய்க்குத் தக்க படித் தலையைச் சீவிக்கொண்டே போவதால், க்ஷேமலாபமோ, சமதர்மமோ என்றாவது ஏற்படமுடியுமா? மத்திய சர்க்காரும், மாகாண சர்க்காரும் வருடா வருடம் விதித்துச் சுமத்தும் புதுப் புது சுமைகள் போதாது, நகரசபையாரும் தொழில் வரி யுயர்த்தி, பணம் பறிக்கும் வழிகளைத் தேடுகிறார்கள். பயிரைக் காக்க நாமாக வைத்த வேலியே பயிரைத் தின்று நம்மை மோசஞ் செய்யுமானால், நமது குறைகளை யாரிடம் முறையிட்டு அழுவது? பணம் பறிப்பதே திட்டமிடும் ஆட்சியாளர் நோக்க மும் கவலையுமாயமைந்துளதே யொழிய, மக்கள் சுகம் நாட அவர்களெவர்க்கும் அவகாச மிருப்பதாகத் தோன்றவில்லையே–

செல்வ வரியாயிற்று; சொத்து வரி; செலவு வரி; இப்பொழுது தானதி விநியோக வரி: பெண் கலியாண காலத்தில் செய்யும் தானத்திற்கு ஓரளவு வரிவிலக்கு கொடுத்துள்ளார்கள் – வரதக்ஷிணை ஒழிக்க வேண்டுமென்ற சமூக சீர்திருத்தக் கூச்சலிடுவோர், அவ் வரதக்ஷிணைப் பேயை, இந்தக் கலியாண தான பூதமாக்கிச் சட்ட அனுமதி கொடுக்கிறார்களா...?பிள்ளைகளை உயர்தர படிப்பிற்கும், வியாபார வழிச் செல்லவும் உபயோகிக்கும் முதலுக்கு வரிவிலக்கு இல்லையா?—இதற்காகப் பிள்ளைகளுக்குப் பிதா கொடுக்கும் தானமோ விநியோகமோ எவ்வளவும் வரி விலக்குக்கு உட்படுத்தப்படவில்லையே — இதுவும், பெண்கள் முன்னேற்ற சீர்திருத்தமா? சொத்து வரியிலும், வரிவிலக்கு அளவு குறைவுபட்டுள்ளது. வருமானவரிப் புனரமைப்பும் பாதிக்கப்பட்டுளது. வரி சுமத்தவோ, விலக்கிற் குரியதாயெனக் கணிசிக்கவோ விதிக்கப்பட்டுள்ள சொத்து மதிப்பு, செலவு மதிப்பு விதிகள், கணக்கற்ற ஊழல்களுக்கும், பொதுமக்களை உபத்திரவிப்பதற்குமே அடிகோலிகளாயமைந்துள. ஒருவன் இறப்பதற்கு 2 வருடத்திற்குள் ஏற்பட்ட தானதி விநியோகங்கள் மட்டும் முன்னர் வரிக்கு உட்படுத்தும் கணக்கில் எடுக்கப்பட்டிருந்தன. இப்பொழுதோ 5 வருடத்திற்குள்ளான விநியோகங்களும் வரி மதிப்புக்கு உட்பட்டதாகின. இவ்விதிகள் யாவும் லஞ்சப் பேயையும், ஊழல் பைசாசங்களையும் நாமாக வலுவில் வரவழைத்து விருந்திடுவது போலவே அமைவனவாயுள. வரி சுமத்த சுமத்த, அவைகளைக் கொடாது தட்டிக்கழிக்கும் முறைகளைக் கண்டுபிடித்துப் பிரசுரிக்கும் நிபுணர்கள், சமூகத்தில் நிறைகிறார்கள். மக்கள் மனமும் அவர்களால் ஈர்க்கப்படத்தான் செய்கிறது. அதிகாரிகள் மனமும், இதன் காரணமாய், பல்வேறு ஊழல்களில் சிக்கத்தான் செய்கிறது. உலக சமாதானத் தூதனாயிருக்கும் நேருஜியின் சுதந்திர இந்திய பட்ஜெட்டில், ராணுவச் செலவே தலைக்கு மிஞ்சியதாயமைந்துளது. இந்தியாவின் சமாதான நிலைமை ராணுவ உதவியும், நிரந்தர பராமரிப்பும் வேண்டி நிற்கிறது!

முந்தரா விசாரணை, மத்திய சர்க்காரில், உயர்தர அதிகார வட்ட ஊழல்களை வெளியாக்கியுள்ளது. கோடம்பாக்கம் வாலிபன் மரண விசாரணை, நமது மாகாணத்திய பாதுகாப்புக்கான போலீசு இலாகாமீது பொதுமக்களுக்கு என்றுமே இருந்து வரும் குற்றங் குறைகளை உண்மைப்படுத்தும் வகையில் வெளிவந்துளது. எங்கும், அதிகாரிகளின் திறனின்மையும், திறனுண்டானால் அஜாக்ரதையும், தன் நலமே முன்வைத்துப் பதவி பயன்படுத்தும் முறையுமே எடுத்துக் காட்டப்படுவதாகிறது. ஓர் கட்சியாருக்கோ, ஓர் சமூக வகுப்பினருக்கோ, திறமையும் தேர்ச்சியுங் கோராது சலுகைகள் மட்டும் அரசாங்க அலுவல்களில் அபரிமிதமாகக் காட்டுவதால், அரசியல் திறமையைத் தாழ்த்தி, பொதுநலம் பேணலையகற்றி, சுயநலப் போட்டியையே வளர்ப்பதாயல்லவா ஆகின்றது!—இதனால், நாளாவட்டத்தில்

நாட்டின் கேடேயன்றோ நாமறியாமலும் நேரிடுவதாகும். ஆங்கிலன் ஆனாலென்?—முஸ்லிம் ஆனாலென்—உயர்த்தப்பட்டவன் ஆனாலென்?—தாழ்த்தப்பட்டவன் ஆனாலென்?—ஹிந்து ஆனாலென்? — ஹிந்து அல்லாதவன் ஆனாலென்? — அனைவரும் இந்தியரேயன்றோ? இந்தியத் தாயின் அருமை மக்களேயன்றோ? ஜாதிபேதமென்பதும், குலாசாரமென்பதும், பாஷைப் பற்று என்பதும், என்றும், எந்நாட்டிலும், எந்தச் சமூகத்திலும் இருந்தேதான் தீரும். அவற்றினைப் போற்றி வளர்ப்பதே உண்மைக் குடியரசின் உத்தம நோக்காயிருத்தல் அவசியம். அந்தந்த ஜாதி குலத்தார், அவரவர் குடும்பத்துடன், தத்தம் குலாசார, மதானுஷ்டானங்களையும், தாய்ப் பாஷையையும் விடாது வளர்க்க வசதிகள் அளித்திடும் அரசாங்கமே, சமூக வாழ்க்கையில், அப் பல்வேறு ஜாதி குலத்தினர்களும், ஒன்று கூடிப் பொதுப் பாஷை வளர்த்துப் பொது நோக்குடன், சம சகோதரர்களாக, அன்புடனும், ஆதரவு கொண்டும், நாட்டின் நலத்திற்கும், மக்கள் மேன்மைக்குமாக ஒத்துழைக்கும் சமதர்ம சமூகம் ஸ்தாபிக்கக்கூடியதாகும். அஃதன்றி, ஜாதி குல வேற்றுமைகளையும் பாஷை வித்தியாசங்களையும் ஒழிக்கப் பார்ப்பது, என்றும் நிறைவேறக் கூடாத பகல் கனவேயாவதுடன், அரசின் அச்சுவேரை நச்சரிக்கும் வேர்ப் புழுவாகி, அரசாங்கத் தற்கொலைக்கே அடிகோலிகளுமாகும். இந்த அபவாதம் நேராது, இனியாவது, சுதந்திர இந்தியாவில் தர்ம ராஜ்யம் வகுத்திட ஈசன் அருள்வாராக: தனிச் சலுகைகளும் கைவிடப் படுமாக. தனிக் கட்சியாரது என்ற அரசியலகன்று, திறமையும் தேர்ச்சியுமே இனி அரசியல் குறிக்கோளாய் அமையுமாக. ●

---



**காப்பி**

**தாயார்:** உம்...குடி காபியை. தினமும் இதுஒரு பாடு உன்னிடம்.

**பெண்:** ஐயோ அம்மா! தினமும் நீ கொடுக்கிற காப்பியை குடிப்பதைவிட விளக்கெண்ணெய் கொடம்மா... சந்தோஷமாகச் சாப்பிட்டுவிட்டு, பள்ளிக்கூடம் போகாமல் வீட்டிலே விளையாடலாம்.



# என்னைக் கவர்ந்த ★ காந்தி ★

—நானறிந்த காந்தி வாக்கு வேதவாக்கு—

ஸ்ரீ. கொடுமுடி ராஜகோபாலன்

1930-ம் ஆண்டு. நான் திருச்சி தேசீயக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலம் அது. காந்தியடிகளின் உப்புச் சத்தியாக்கிரகம் ஆரம்பமாய் விட்டது. அந்த 'அரைக் கோவணதாரி'யின் தலைமையில் 'டண்டி'யாத்திரை தொடங்கி விட்டது. 'கரிபால்டி'யின் யாத்திரை போன்றதன்று காந்தியடிகளின் யாத்திரை. இரண்டுமே சுதந்திரம் பெறும் லட்சியத்துடன் ஆரம்பிக்கப்பட்ட சரித்திரப் பிரசித்திப் பெற்ற யாத்திரைகளேயாம். ஆயினும், இத்தாலிய வீரனின் யாத்திரையோ, பலாத்கார உணர்ச்சி கொண்ட—சுதந்திர உத்வேகமுள்ள யாத்திரையாகும். இந்திய காந்தியின் யாத்திரையோ அஹிம்சா யாத்திரையாகும். ஒன்றில், சுதந்திர விரோதிகளை ஒழித்துக் கட்டும் வன்மமிருந்தது; மற்றொன்றிலோ, சுதந்திர விரோதிகளின் தாக்குதல்களை, எதிர்த்தாக்குதல் புரியாமல், மரண பயமின்றி, ஏற்றுக்கொண்டே, முடிவில் தமது ஆத்மத் தியாகம்—சக்தி மூலம், அவர்களைப் பணிய வைக்கின்ற எல்லையற்ற மனோபலத்துடன் கூடிய தன்னம்பிக்கை இருந்தது. எனவே, காந்தியடிகளின் அறப்போர் என்னைப் போன்ற பல இளைஞர்களைக் கவர்ந்தது என்று சொல்லவும் வேண்டுமோ?...கல்லூரிப் படிப்பை விட்டுச் சுதந்திரப் போரில் அக் காலத்தில் குதித்த இளைஞர்களில் நானும் ஒருவன்.

அன்றிலிருந்து எனது புதிய வாழ்க்கை தொடங்கியது. எவ்வளவோ வேதனைகளை என்னைப் போன்றோர் அனுபவித்தோம். காந்தியடிகளின் கருத்துக்களை நான் முற்றிலும் ஏற்காத நிலைமையில் கூட ஒரு சமயம் இருந்திருக்கிறேன். ஆயினும், அவருடைய சக்தியை நான் உணராமல் இருந்ததேயில்லை. தாம் நினைத்தபோது, சுதந்திரப் போராட்டத்தை, மகாஜனப் போராட்டமாகவும், (Mass Struggle), தனி நபர் சத்தியாக்கிரகமாகவும் (Individual Satyagraha) மாற்றவல்ல தனிப்பெரும் அரசியல் பலமாகவே அவர் விளங்கினர்.

ஆயுதப் போட்டியால்-அரசியல் ஆதிக்கப் போட்டியால் தளர்ந்திருக்கும் இன்றைய உலகம், நிம்மதியை ஆவலுடன் நாடுகிறது. ஒவ்வொரு நாடும் தன்னுடைய அரசியல் எல்லையுடன் நின்று, தன் தேவைக்கும்-பிற்போக்கான நாடுகளின் அபிவிருத்திக்கு நாணயமாக உதவி செய்ய வேண்டிய அளவுக்கும் ஒத்தளவில் உற்பத்தியைப் பெருக்கி வளர்ச்சியடைவதாக இருந்தால், போட்டியும்-பலாத்காரமும் எங்குமே தென்படாதிருக்கும்.

போட்டியும்-பலாத்காரமுமற்ற நிலையில்தான் மக்கள் பரிபூரண நிம்மதியுடன் வாழமுடியும். இந்த அடிப்படையில் காந்தியடிகள் உலக முழுவதுக்குமே சேவை செய்தார்.

சுயபுத்தியுள்ளவர்களும்-தன்னம்பிக்கைப் பலமுள்ளவர்களும்-அகத் தூய்மையுள்ளவர்களும்-மனத் தெளிவு-துணிவுள்ளவர்களுமே காந்தியடிகளின் தத்துவத்தை நன்ருக அறிந்து கொள்ள முடியும். மிகத் தொன்மையான காலத்திலிருந்தே மலர்ந்து,வளர்ந்து,பரந்திருக்கும் இந்தியப் பண்பாடெனும் சாரமுள்ள பண்பாட்டைப் பற்றி நன்கு அறிந்தவர்களும்-அதை ஒப்புக் கொள்ளுகிறவர்களுமே "காந்திஜி" என்ற பெயரில் வாழ்ந்து அமரராகிவிட்ட அந்த மனிதப் பெயருக்குப் பின்னல் மேலோங்கி நிற்கும் அதிமனிதத்துவச் சக்தியை உணருவார்கள். எனவே, அச் சக்தியெனும் தரும பேரிகை எழுப்பிய ஒவ்வொரு ஒலியும் வேத வொலிதான்! ஆகையால்தான், நானறிந்த காந்தி வாக்கு அனைத்துமே வேதவாக்குதாம் என்று துணிந்து கூறுகிறேன்.

'கோடிக் காணக்காக நீங்கள் சம்பாதியுங்கள். உங்களுக்குத் தேவையானதையே வைத்துக் கொள்ளுங்கள். ஆடம்பரமாக வாழாதீர்கள். உங்கள் தேவைக்கும் வரையறை உண்டு மிகுந்தது எல்லாம் சமூகத்தைச் சேர்ந்தவையாம்" என்கின்ற காந்தி வாக்கில், சர்வோதய நாதம் ஒலிப்பதைக் கேளீர்!

தாம் சொன்னது போலவே காந்தியடிகள் வாழ்ந்து காட்டிய நெறி, புரக்கும் நீதி வழுவா நெறி வழியாகும்.

மனிதனை யந்திரம் போலாக்கி, கட்டுப்பாட்டின் பெயரால், அவனுடைய ஆற்றலின் உயிர்ச் சக்தியைப் பறித்துவிடுவது ஜனநாயகமாகாது என்ருர் காந்திஜீ. இது இன்றைய நிலைமைக்குப் பொருத்தமாயிருக்கவில்லையா?....... சிறிது யோசித்துப் பார்த்தால், அந்தத் தீர்க்கதரிசியின் வாக்கின்-வேத வாக்கின் அழியாப் பொருள் புலனகும்.

நம்முடைய குறைபாடுகளை நாம் உணர்ந்து அவைகளைத் திருத்திக் கொள்ளுவோம்; உழைப்பதாக நம்மையும்-பிறரையும் ஏமாற்றிக் கொள்ளாதிருப்போம்; மனக் குழப்பத்தை விட்டொழிப்போம்; ஆடம்பரமின்றி-தருமப் பொறுப்புகளையுணர்ந்து, உலகம் உய்வதற்கான காந்தி வழியில் செல்லுவோம்.

அவர் வாழ்வின் கடைசி அத்தியாயமே அவரது வரலாற்றின் மிகச் சிறப்பான பகுதியாகும் என்று குறிப்பிடுகிறார்கள் சிலர்! ஒரே விஷயத்தில்தான் இக் கூற்று உண்மையானதாக இருக்க முடியும்!

ஏகாதிபத்ய அதிகாரத்தை ஏகபோகமாக இந்திய மண்ணில் செலுத்தி வந்தவர்கள், திடீரென தங்கள் வசமிருந்த அதிகாரத்தை இந்தியர் கைக்கு மாற்றியதுதான் அவ்விஷயமாகும். எனவே, அதில் பொய்யிருக்க முடியாதல்லவா?... மற்றபடி, அவரது வரலாற்றின் அந்தக் கடைசிக் காலத்தில்தான் அவர் பெரிதும் மனமுடைந்து போனார். தமது சகாக்களே தம்முடைய வழியிலிருந்து விலகிச் செல்லுகின்ற துக்கக் காட்சியைப் பார்க்க அவர் உயிருடனிருந்தார்!....

அது கிடக்கட்டும்!...

அவர் மரணமாவதற்கு முன்பு, கடைசியாகத் தென்னாட்டில் யாத்திரை செய்தார். அவரை நான் கடைசிக் கடைசியாகப் பழனியில் தரிசித்தேன். என் மனைவியுடன் நான் அவரை நேரில் தரிசித்த அந்த நன்னாளை மறக்கவே முடியாது! பத்து லட்சம் மக்கள் கூட்டத்தில் அவர் மேடை மீது அமர்ந்திருந்து காட்சியளித்தாரே, அந்தப் பொற்சோதிக் காட்சியையும் மறக்கவே முடியாது. அப் பத்து லட்சம் மக்களையும் அவர் "ராம்துன்" பாட வைத்தார்! அன்பெனும் மந்திரக் கோலால் அத்தனை பேருடைய உள்ளத்தையும் ஆட்கொண்டு—அவர்களை ஆட வைத்த—பாட வைத்த காந்தியடிகளைப்போன்ற மாபெருந்தலைவர் எங்கே? அவர் பிரதிபலித்த அருங்குணச் சிறப்புகள்தாம் எங்கே? என்று "அவைதாம் எங்கே?" என்ற தலைப்பில், உணர்ச்சியுடன், கேள்வி கேட்கின்ற பின்வரும் கவிதையுடன் இக் கட்டுரையை முடிக்கிறேன்.

கவிதை :

புத்தனொடு கருணை போயிற் றுயர் சனக இராசனொடு புரக்கும் நீதி,
இத்தரையிற் போயின தால் இராமனொடு எழிவீர மகன்றதென்று,
உத்தமர் களுரைப்பார்கள்; அவையெல்லா மிலங்கிடவே
காந்தி வந்தான்;
அத்தனவன்; அமர வாழ்வடைந்தவுடன் அவனிதனில்
அவைதாம் எங்கே?

# பாரதப் பூங்கா

இன்றும் யாராவது விசேஷமான தர்மங்கள் செய்தால் கொடையில் கர்ணன் தான் என்று சொல்லுகிறோம். சிறந்த வள்ளலான கர்ணன் பிறப்பு அதிசயமானது. ஆண் குழந்தைகளை மட்டும் வளர்ப்புக்கு கொடுப்பது என்பதில்லை. பெண் குழந்தையையும் கொடுத்திருக்கிறார்கள். சூரன் மூத்த மகள் குந்தியை அத்தை மகனுக்கு சுவிகாரமாகக் கொடுத்தான்.

குந்தி அழகிற் சிறந்தவள் மட்டுமல்ல குணத்திலும் மிகச் சிறந்தவள். முன் காலத்தில் கன்னிகைகள் வீட்டிற்கு வரும் பெரியவர்களை வணங்கி பணிவிடை செய்வார்கள். அம்மாதிரி ஒரு நல்ல வழக்கம் இருந்தது. பெண்கள் விரோதியைக் கண்டால்கூட பெரியவர்களாக இருந்தால் நமஸ்காரம் செய்வார்கள். தன்னை ஒருவர் வணங்கும் போது மனதில் குரோதம் தோன்ருது, தன்னை அறியாமலே வாய் வாழ்த்தும். சாவித்திரி கன்னிகையாக இருக்கும் போது, நாரத மாமுனியை வணங்கினாள். அவர் 'தீர்க்க சுமங்கலி பவ' என்றும் வாழ்த்தி விட்டார். மகான் வாக்கு பொய்யாகாது. சாவித்திரிக்கு யமனுடன் வாதாடி சௌமங்கல்யத்தை பெறும் ஆற்றல் முனிவருடைய வாழ்த்தினல் வந்தது.

வீட்டில் துர்வாஸ மகரிஷி வந்து தங்கினபோது குந்தி அவருக்கு பக்திசிரத்தையுடன்பணிவிடை செய்கிருள். மகரிஷிக்கு கோபம் எவ்வளவு சீக்கிரம் வருமோ அவ்வளவு சீக்கிரம் சந்தோஷமும் வந்துவிடும். குந்தியை மனமார ஆசிர்வதிக்கிறார். அத்துடன் கன்னிகைக்கு ஒரு அபூர்வமான மந்திரத்தை உபதேசம் செய்கிறார். நீ எந்த தேவதையை நினைக்கிருயோ அந்த தேவதை உன் முன்னல் தோன்றும். அதன் மூலமாக அந்த தேவதையின் சக்தியுள்ள பிள்ளை உனக்கு பிறக்கும் என்று அருள் செய்தார்.

கன்னிப் பெண்ணன குந்தி வேடிக்கையாக சூரிய பகவானை குறித்து உச்சரிக்கிருள். உடனே சூரிய பகவான் தேஜோமயமாகத் தோன்றுகிறார். குந்தி நடுங்குகிருள். ஆனல் மந்திரத்தின் சக்தி வீண் போகவில்லை. சூரிய பகவானல் குந்திக்கு அழகான ஆண்குழந்தை பிறக்கிறது. காதில் கவச குண்டலங்களுடன் அழகான குழந்தையைக் கண்டு கலங்கினள் குந்தி. சூரிய பகவானுடைய ஆசியில் மறுபடியும் கன்னிப் பெண்ணக மாறுகிருள்.

அபவாதத்திற்கு பயந்து குழந்தையை ஒரு பெட்டியில் வைத்து ஆற்றில் விட்டு விடுகிருள்.

குந்தி ஹஸ்தினபுரத்து அரசன் பாண்டுவை மணக்கிருள். பீஷ்மர் அரச குலத்தின் எதிர்காலத்தை எல்லாம் யோசித்து திட்டம் செய்கிருர். மகானகையால் பின்னல் என்ன சம்பவிக்கக் கூடுமென்ற பேரறிவும் அவருக்கிருந்தது. எனவே மாத்ரி என்ற மற்றெரு ராஜ குமாரியை பாண்டுவுக்கு இரண்டாவது மனைவியாகச் செய்கிருர்.

வேட்டை ஆடுவதும், யுத்தம் செய்வதும் அரசர்களின்

★ வசுமதி ராமசுவாமி ★

கடமை என வைத்திருந்தார்கள். ஆனால் அதில் சட்டதிட்டங்கள் இருந்தன. வேட்டை ஆடுவதில் தவறுகள் நேரக் கூடாது. தசரத சக்கிரவர்த்தி யானை தண்ணீர் குடிக்கிறது என்று எண்ணினார். அதனால் கண்ணால் பார்க்காமல் ஒரு இளைஞன் மேல் அம்பை விட்டார். வயோதிக பெற்றோர்களின் ஒரே மகன். அவர்கள் தசரதனை "நீ புத்திரன் பிரிவால் இறக்கவேண்டும் என்று சபிக்கிறார்கள்". சாபத்தைக் கேட்டு பூமி நடுங்கினாள். அப்படியே ராமரைப் பிரிந்து உயிர் நீத்தார். பாண்டுமகாராஜா காட்டில் வேட்டை ஆடுகிறார். மான் என நினைத்து ரிஷி தம்பதிகள் மேல் அம்பை எய்து விடுகிறார். ரிஷி "நீ உன் மனைவியுடன் சுகித்திருக்கும் போது மாண்டு போவாய்" என சபிக்கிறார். பாண்டு துக்கப்படுகிறார். காட்டில் ப்ரம்மச்சாரியத்துடன் இருக்கிறார்.

வம்சம் அற்றுப்போய் விடக் கூடாதென்று பீஷ்மர் நினைக்கிறார். குந்தி துர்வாசர் உபதேசித்த மந்திரத்தை மூன்று முறை உச்சரிக்கிறாள். அவளுக்கு தர்மராஜன் அருளால் தர்மனும், இந்திரன் அருளால் அர்ஜுனனும், வாயு பகவான் கருணையால் பீமனும் பிறக்கிறார்கள். மாத்ரி குந்தியின் உபதேசப்படி இரண்டு தடவை உச்சரிக்கிறாள். அவளுக்கு நகுலன்சகாதேவன்பிறக்கிறார்கள்.

வசந்த காலத்தில் மனந்தடுமாறிய பாண்டு மாத்ரியுடன் கூடுகிறான். சாபத்தினால் உடனே மரணத்தை அடைகிறான். மாத்ரி தன்னால் கணவன் இறந்து விட்டதைப் பார்த்து புலம்புகிறாள்.

குந்தியிடம் தன் பிள்ளைகளை ஒப்படைத்து விட்டு மாத்ரி கணவனுடன் உடன் கட்டை ஏறுகிறாள்.

குந்தியின் மேதை பாரதத்தில் பல இடங்களில் காட்டப்படுகின்றன. அரசனை மணந்த குந்தி இளையவளான மாத்ரியுடன் மனமொத்து வாழுகிறாள். தனக்கு துர்வாசரால் உபதேசிக்கப் பட்ட மந்திரத்தை மாத்ரிக்கும் சொல்லுகிறாள். ஒரு பெண் சக்களத்திக்கு குழந்தை பிறப்பதை விரும்புவாளா?

மாத்ரியினால் தன் கணவன் இறந்த போது குந்தி ஏசவில்லை. அன்புடன் அவளைத் தேற்றுகிறாள். அவள் இறந்த பிறகு அவளுடைய பிள்ளைகளையும் தன்னுடைய பிள்ளைகளாகவே நினைக்கிறாள். அநேகருக்கு மாத்ரியின் பிள்ளை நகுலன், சகாதேவன் எனத் தெரியாது, குந்தியின் பிள்ளைகள் என்றே கருதினார்கள்.

மனதில் ஐந்து பேரும் தன் மக்களாகவே தோன்றினதால் திரௌபதியை பார்க்காமலே ஐவரும் பகிர்ந்து கொள்ளுங்கள் என்றாள்.

அதிக துன்பம் அடைந்த குந்தி கிருஷ்ண பகவானிடம் எனக்கு எப்பொழுதும் கஷ்டத்தையே கொடு அப்பொழுது நான் உன்னை மறவாமல் இருப்பேன் என்கிறாள்.

சுடு சொற்களை வீசும் காந்தாரியிடம் தலை தாழ்ந்து பேசுகிறாள் குந்தி. பாரத பூங்காவில் குந்தி தண்ணீருக்கு காத்திராது காய்களைத் தரும் தென்னைமரம் போன்ற உறுதியானவள். ✿

# சொல்லட்டுமா!

ஹாஸ்ய நடிகர் L. நாராயண ராவ்



என் ஆத்திரத்தை அடக்கும் பாவனையில் ஓசை செய்யாமல் ஒரு துண்டைப் போட்டுக்கொண்டு முடங்கியவாறு படுத்திருந்தேன். 'வரட்டும் அந்தக் காளி. என்னைத் தாண்டித்தானே அவள் உள்ளே செல்லவேண்டும்? அப்படியே போட்டு...' என் கோபம் பீரிஎழுந்துகொண்டிருந்தது.

தெருவில் சலசலவென்ற புது ஆடையின் ஓசையும், பெண்கள் குரலின் சப்தமும் அருகில் கேட்டது. அவர்கள் சிரிப்பொலி எனது வயிற்றைக் கீறுவதுபோல் இருந்தது. வெளியாருக்கு தூங்குவது போலும் எனக்குமட்டும் கண் தெரியுமளவு சிறியதாக திறந்துகொண்டிருந்தேன். ஒவ்வொருவராக என்னைக் கடந்து சென்று விட்டனர். அந்தக் கள்ளி மட்டும் கதவோரம் நின்று நான் எங்கு இருக்கிறேனோ? எப்படிதாக்குவேனோ? என்று நிதானித்தாள். நான் தூங்குவதாக நினைத்துக் குதூகலத்தோடு ஆடிக்கொண்டே வந்தாள். குபீரென்று எழுந்தேன்.

"ஏய்! அகப்பட்டாயா? ஹூம் ... எங்கே என் பித்தான்?" என்று அதைச் சட்டையிலிருந்து பிடுங்கப் போனேன். ஆனால் என் கையோடு வந்தது எலக்டிரிக் பித்தான் அல்ல. 'கண்டி' என்னும் தங்கத்தில் செய்யப்பட்டிருந்த உயர்ந்த நகையே. எடுத்தது குலைநடுங்கும். 'ஐயோ! அறுந்துவிட்டதே' என்று ஒரு நிமிஷந்தான் எண்ணிக் கலங்கினேன். மறுநிமிடம் ஒரு மூலையை நோக்கி ஓடத் தொடங்கினேன்.

அதற்குள் "ஐயோ! அம்மா, பாட்டி, சித்தி, அப்பா, எல்லோரும் ஓடிவாருங்கள். அந்தத்திருடன் 'தவு...கண்டியை பிய்த்துவிட்டான். மாலையை அறுத்துவிட்டான். கழுத்தோடு இழுத்துவிட்டான்" என்று அலறத் தொடங்கினாள். ஏற்கனவே அவளுக்காகப் பரிந்துகொண்டு வரும் சேனைகளோடு, இப்போது கல்யாணத்திற்கு வந்திருக்கும் கும்பலும் சேர்ந்து அவளைச் சுற்றிச் சூழ்ந்தது.

சற்று நேரத்தில் "எங்கேடா அந்தப்பயல்? ராஸ்கல், நகை என்பதுகூட அந்தக் கழுதைக்குத் தெரியவில்லையா?" என்றும், "தள்ளுங்கள் எல்லோரும். அவனுக்குச் சரியான பூசை போடவேண்டும்" என்றும், "ஒரு பித்தானுக்காகவா தங்க நகையைப் பாழாக்குவது; இப்படிபட்ட முரடனாகவா ஒரு

பையனை வளர்ப்பது?'' என்ற குரல்கள் ஒன்றுமேல் ஒன்று கிளம்பின.

மூலையில் நான் நின்றிருந்த இருப்பிடத்தை விட்டு நகர வேண்டியதுதான். நகருவதா? தப்பி ஓடத்தான் வேண்டும். இருட்டோடு இருட்டாக மெது வே சொல்லம்புகளைத் தாக்கிக் கொண்டே இறங்கி ஒரே ஓட்டம் எடுத்தேன். எங்கே போவது? என்ன செய்வது? என்பது புரிந்தால்தானே!

ஒரு திடீர் யோசனை பளிச்சிட்டது. நேராகக் கல்யாண வீட்டிற்குச் சென்றேன். சந்தடியின்றி வாயில் திண்ணைகளில் படுத்து உறங்கியவர்களின் மத்தியில் நானும் சாதுவாய் படுத்தேன். உறங்கியும் விட்டேன். ஆனால் பயம் தூங்கவிட்டால் தானே? அதிகாலையிலேயே அலாரம் அடித்தது போல் எழுப்பிவிட்டது. இரவு அடங்கிய புயல்காலையில் வீச ஆரம்பிக்குமே. அதைத் தடுக்க வழி? என் மூளை குழம்பியது.

'ஆண்டவனே நீ விட்டது வழி' என்று கோயில் பின்புறமுள்ள, தோப்பிற்குச் சென்றேன். பொழுது பொலபொல வென்று வெடிந்து கருக்கல் நீங்கியதும், என் அந்தரங்க நண்பன் அங்கு உதயமானான். "என்னடா? இவ்வளவு காலையில் இந்தப் பக்கம்? என்றேன் நான்.

"தேவு! மனசு சரியில்லையடா!'' என்று பெருமூச்சுவிட்டான்.

"எனக்கும் அதேதான். முன்பெல்லாம் நாம் பேசிக்கொள்வோமே. அதுபோல் எங்காவது ஓடிவிடலாம் வருகிறாயா? இந்த ஊரே, மனிதர்களே பிடிக்கவில்லை'' என்று யோசனை கேட்டேன்.

அவன் முகம் மலர்ந்தது. நான் செய்த காரியத்தைச் சாரமாகக் கூறினேன். அவன் மனது சரியில்லாததற்கும் சரியான காரணத்தைத் தெரிவித்தான். அவனிடம் பணமும் கையில் வைத்திருப்பதாகச் சொன்னவுடனே கிளம்பிவிட்டேன். வெகுதூரம் நடந்து ஸ்டேஷனை அடைந்தோம். எந்த ஊருக்குப் போவது என்ற ப்ரசினை அங்கு சென்றதும் ஏற்பட்டது. பெங்களூருக்கு டிக்கட் வாங்கிக்கொண்டு ஏறிவிட்டோம்.

பெங்களூரில் ஒரு ப்ரபலஸ்தர் என் தந்தைக்கு மிகப் பரிச்சயமானவர். என் அப்பா கதைக்குப்போகும்போது ஒருதரம் என்னை அழைத்துச் சென்றிருக்கிறார். அவரும் எங்கள் வீட்டிற்கு வந்திருக்கிறார். அந்தப் பக்கபலம் இருக்கவே பழக்கத்தால் கஷ்டமின்றி அழைத்த விருந்தாளி போல் அவர் வீட்டில் போய் இறங்கினோம். அவர்களும் தடபுடலாக வரவேற்றனர்.

"ஏண்டா தேவு! என்ன திடீர்னு வந்தே... தனியாகவா வந்தே?''

"ஆமாம் மாமா! தனியாகத்தான் வந்தேன். என்ன பயம்? இவன்தான் கூட இருக்கிறானே.''

"என்ன காரணமாய் வந்திருக்கிறாய்? அப்பாவிடம் சொல்லிக்கொண்டுதானே வந்தே?'' என்று வெடிகுண்டு கேள்வியைப் போட்டார்.

'கெட்டிக்காரன் புளுகு எட்டே நாளில் தெரிந்துவிடும்' என்றபடி என் கதி ஆகக்கூடா

தே என்று சமயோசிதமாய்ப் புளுகத் தீர்மானித்தேன்.

“இங்கு வாஸுதேவாச்சாரிடம் பாட்டுச்சொல்லிக்கொள்ளலாம்என்று அப்பாவிடம்சொல்லிக்கொண்டுதான் வந்தேன்”

“வாஸு தேவாசாரிடமா? பேஷ்! நாளைக்காலையில் நான் இங்கிருந்து ஆள் துணையோடு நேரே மைசூர் கொண்டு விட்டு விடுகிறேன்” என்றார் அவர்.

இதென்னடா சங்கடம். அப்பாவிற்கு எங்காவது, ஏடாகூடமாகக் கடிதமெழுதிவிடப்போகிறார் என்று பயப்படுவதற்குள், நேராக மைசூர் அனுப்புகிறாராமே? இங்குகூட நம் ஜம்பம் பலிக்காது. காலையில் ஓட வேண்டியதுதான்’ என்று என் மனத்திற்குள் எண்ணினேன்.

இரவு நல்ல சாப்பாடும், படுக்க சுகமான வசதியும் கிடைத்தது. ஆனால் உள்ளுக்குள் ஏதோ ஒன்று உதைத்தவாறே இருந்தது. ஊரைச் சுற்றப்போவதுபோல் சென்று அப்படியே அவர்களுக்கு ஒரு கும்பிடுபோட்டுவிட்டு தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று ஓடிவிட்டோம்.

அங்குபோய் மைசூர் பக்கத்தில் அணிந்து கொள்வது போல் முழங்கால் வரை நீண்ட ‘ஷேர்வானி’ ஒன்றும் தைத்துக்கொண்டேன். அதைப் போட்டுக்கொண்டு கம்பீரமாக நடக்கும்போது நான் தான் மைசூர் சாம்ராஜ்யத்தின் ராஜாவோ என்று ஐயுறும்படி இருப்பதாக என் மனதில் எண்ணம். பெங்களூரிலும், மைசூரிலும் பல இடங்களைச் சுற்றினோம். அந்தப்பையனின்கையிலிருந்த பசை கரைந்துகொண்டே வந்தது. கையில் பைசாயில்லாது என்ன செய்வது? தெரிந்தவர் வீட்டிலிருந்தும் திருட்டுத்தனமாக ஓடிவந்துவிட்டோம். நாங்கள் காணாது போனது பற்றி அவர்கள் பயந்துகொண்டு, அப்பாவிற்கு தந்தியடித்து விடுவார்களோ? இவ்வூர்முழுவதும் எங்கு சல்லடை போட்டு கிலிக்கத் தொடங்கிவிடுவார்களோ? என்கிற திகில் பூர்ணமாகப் பிடித்துக்கொண்டது. அதுமட்டுமா! என்னுடன் கூடவந்துள்ள சிநேகிதனுக்கு தலைவலி காய்ச்சல்வேறு லேசாகக் கண்டிருப்பதைப் பார்த்தும் என் நிலையை என்னாலேயே நிர்ணயிக்க முடியவில்லை.

ஊரைவிட்டுக் கிளம்பும்போது தங்கையின் பொன் நகையை சிதரவடித்துவிட்டதற்கு என்ன தண்டனை கிடைக்குமோ! என்று மட்டும் இளம் உள்ளம் நடுங்கியதேயன்றி சொல்லாமல் துணிச்சலுடன் ஓடி விடுவதில் எத்தகைய விபரீதமான ஆபத்துக்கள் இருக்கும். . என்பதை நினைக்கவே இல்லை. எப்படியாவது மக்கள் கண்களில் படாமல் ஓடிவிட்டால். “ஜிகுஜிகுஜிகுஜிகு” ரயிலில் போகலாம். ஊர் ஊராய் பார்க்கலாம் வேண்டியதை வாங்கித் தின்கலாம். ஒருவரிடமும் பயப்படாது நடக்கலாம்......இது போன்ற அர்த்தமற்ற கர்ப்பனையில் கிளம்பிவிட்ட எனக்கு இன்று அந்த கர்ப்பனைக்கு நெஞ்சில் இடமே உண்டாகாமல், சிநேகிதன் படுத்துவிட்டானே......ஏதாவது ஆகிவிடுமோ. நாம் என் செய்வது.

(தொடர்ச்சி 16-ம் பக்கம்)

# ஈர மனம்

டி. எஸ். ராஜகோபாலன், பி.ஏ., எல்.டி.

வைஷ்ணவ சமயப் பேராசிரியர்களுள் பட்டர் என்பவர், ஞானத்தாலும், கல்வியாலும், மதி நுட்பத்தாலும், தூய ஒழுக்கத்தாலும் மிகவும் மேம்பட்டவர். இவர், இராமாநுஜாசாரியாருடைய பிரதம சிஷ்யரான கூரத்தாழ்வானின் அரும் பெறல் புதல்வராவர். இவரது மனம், எப்போதும் இறைவனைப் பற்றியே நினைந்து வந்தது. இவர் காண்பன யாவும், இவர்க்குப் பரமனது கருணையை நினைவூட்டின. முன்பு ஒரு முறை இவர் திருப்புல்லாணிக்குச் சென்றார். கடற் கரையில் நின்றுகொண்டு, கடற் பரப்பினையும், எழும்பும் அலைகளையும் கூர்ந்து நோக்கியபோது, இவரது மனக் கண் முன்னே இராமபிரானது வரலாறு ஓவியத்தில் திகழ்வதுபோல் நின்றது. கடற் கரையில் தமக்கருகில் ஓர் அமுதக் கடல்போலே இராமபிரானைக் கண்டார்; அக்கரையிலே பொல்லா அரக்கர்களின் தலைவனாகிய இராவணனையும், இக்கரையிலே இரண்டாவது கடல்போல் எழுபது கோடி எண்ணிக்கையுள்ள வானரப் பெரும்படையினையும் கண்டார். வானரர்கள் யாவரும் இராமனைக் குறிக்கொண்டு நோக்கிக்கொண்டு போர, அவர்கள் சோர்வினாலே கண் உறங்கிக் கால் ஓய்ந்து, கை சோர்ந்தனர்; இராம பிரானும் இளையவனும் அரையில் கட்டிய கச்சும், சுருங்கிய சீராவும் நாணியும், முதுகிலே கட்டிய அம்பறாத் தூணியும், கையிலே தெறித்துப்பிடித்துப் பெருக்கின சரமும் ஏந்திய வில்லுமாய், பறவைகள் தாம் இட்ட முட்டைகளைத் தம் சிறகின் கீழே நோக்கி யிட்டு வைப்பதுபோலே, எழுபது வெள்ளம் வானர சேனையையும் சுற்றிச் சுற்றி நடையாடும் மதிள்கள் போலே வட்டமிட்டு ஓரிரவெல்லாம் கண்ணினைக் காக்கும் இமையைப்போல் காத்தனர். இவ்வரலாறு முழுதும் நினைவுந்தவச, பட்டரும் ஆனந்தக் கண்ணீர் உகுத்து, கடலையே நோக்கித் தொழுது நின்றார்.

பின்னர் ஒரு நாள் வீரசிகாமணிப் பல்லவராயன் என்ற அரசன், தனக்குத் தஞ்சமான ஒன்றை உபதேசித் தருளுமாறு பட்டரை வேண்ட, இவரும், "கடற்கரை வெளியை நினைந்திரும்" என்று அருளிச் செய்து, இதனை மேலே கூறியவாறு விரித்துரைத்தார். அன்றியும், "இப்படிப்பட்ட பெருந்தகையான சக்ரவர்த்தித் திருமகனுடைய கையும் வில்லுமே தஞ்சமென்றிரும். உறங்குகிறபோது நம்மை ரக்ஷிக்குமவன், உணர்ந்தால் நம்மை நோக்குமென்றிருக்கச் சொல்ல வேண்டாவிறே!" என்றும் உபதேசித்தார்.

பட்டர் திருவணையில் நீராடி மீளும் போது ஒரு நாள் மாலை வேளையில் அடர்ந்த காடு ஒன்றின் வழியே தமது சீடர்களுடன் நடந்து சென்றார். சுற்றிலும் கண்ணுக் கெட்டியவரையில் இருளடர்ந்த காடாகவே இருந்தது; எனினும் இவர் சிறிதும் மனந் தளராமல்

"பொருந்தார் கைவேல் நுதிபோல்
பரல்பாய
மெல்லடிகள் குருதிசோர
விரும்பாத கான்விரும்பி வெயி
லுறைப்ப
வெம்பசி நோய் கூர......"

என்றும், "கானமருங் கல்லதர் போய்க் காடுறைந்தான்" என்றும் பலவாறு இராமபிரானது வன வாசத்தைப் பற்றிய பாசுரங்களைச் சொல்லிக்கொண்டு உடன் வருமவர்களது களைப்பையும் போக்கி வந்தார். கதிரோன் குணதிசையில் ஆழும் சமயத்தில் எதிரே வேடன் ஒருவன் வில்லுங் கையுமாக வருவதைக் கண்டார்; இவர்க்குக் குகனது வரலாறு நினைவிற்கு வந்தது. வேடனும் இவரைக் கண்டதும் கீழே விழுந்து வணங்கி, "சுவாமீ! தாங்கள் யார்? தங்களைக் கண்டதும் என் குல தெய்வம் புலாணி நாதனைக் கண்டதுபோல் இருக்கிறது. இதோ இருப்பது என்னுடைய கிராமம், பாதிரி என்று பெயர் இதற்கு. அதோ இருப்பதுஎன்னுடையகுடிசை; அதில் இன்றிரவு தங்கி' நாளைக் காலை புறப்படலாம்' என்று வேண்டிக்கொண்டான். பின்பு இவருடன் தன்னுடைய குடிசைக்குச் சென்று,குடிசைக்கெதிரில் கட்டில் ஒன்றினை அமைத்து அதில் இவரை அமரச் செய்து, இவர்க்கும் இவரது சீடர்க்கும் தேனும் தினைமாவும் அளித்தான். இதைக் கண்டு வியந்து, பட்டர் தமது சீடர்களைப் பார்த்து, "இவன நமக்கு அளித்த வரவை ஓர்ந்து பாருங்கள். நான் யார் என்பதை உணர்ந்து எனக்கு மரியாதையாக இவன் உபசரிக்கவில்லை; தன்னுடைய கியாதிக்காகவும் இங்ஙனம் செய்யவில்லை; நான் செய்த ஏதேனும் ஒன்றுக்காகக் கைமாருகவும் செய்யவில்லை; ஆனால் தன்னுடைய வீட்டில் நாம் புகுந்தோம் என்ற அபிமானத்தாலேயே இவ்வாறு செய்திருக்க வேண்டும். பறவை விலங்குகளை வேட்டையாடி வயிறு வளர்க்கும் ஒருவனுக்கு, ஒருவன தன் வீட்டிற் புகுந்தான், அவனுக்கு உபசாரஞ் செய்ய வேண்டும் என்ற எண்ணம் உதிக்கும்போது,எல்லாம்வல்ல ஈர நெஞ்சினனாகிய நம் இறைவனுக்கு மனதில் என்ன தோன்ற வேண்டும்?" என்று கூறிக் கொண்டே வேடனைப் பார்த்து, "இன்று ஏதேனும் விசேஷம் உண்டோ?" என்று கேட்டார்.

வேடன், "ஐயா, நான் காட்டில் வேட்டைக்குப் போனேன்; அங்கு ஒரு முயல் குட்டியைப் பிடித்தேன். அதனுடைய தாய் என் முன்னே வந்து வழி மறித்து என் காலைச் சுற்றிச் சுற்றி வந்தது. இதைக் கண்டு எனக்குத் தயை பிறந்தது; அந்தக் குட்டியை உடனே விட்டுவிட்டேன்" என்ருன்.

இதைக் கேட்ட பட்டர், தாரை தாரையாகக் கண்ணீர் உகுத்து, மயிர்க்கூச்சுக் கொண்டு, "அப்பா! நீ நன்று செய்தாய். நீ செய்தது சரணுகதிக்கு ஓர் எடுத்துக்காட்டாயிற்று" என்ருர். "எங்ஙனம்?" என்று சீடர்களில் ஒருவர் வினவப் பட்டரும், "இன்றை நிகழ்ச்சியில் நாம காண்பன இரண்டு. ஒன்று ஆறறிவு படைத்தோரிடம் பொதுவாகக் காணப்பெருதது; மற்றது இறைவனிடம் காணப் பெறுவது. 'மாம் ஏகம் சரணம் வ்ரஜ' (என்னையே சாணமாக அடை) என்று கண்ணபிரான் கூறியதை இந்தத் தாய் முயலுக்கு உபதேசித்தார் ஒருவருமிலர்; 'அரி: ப்ராணாந் பரித்யஜ்ய ரக்ஷி

தவ்ய: க்ருதாத்மநா' (நல்லறிவு வாய்ந்தவன், தன் உயிரைவிட்டாயினும் விரோதியைக் காக்கக் கடவன்) என்ற மேம்பொருளை இவ்வேடனுக்கு உபதேசித்தாரும் ஒருவரு மிலர். 'நின்னலால் இலேன் காண், என்னை நீ குறிக்கொள்ளே' என்றும், 'களைவாய் துன்பம், களையா தொழிவாய், களைகண் மற்றிலேன்' என்றும் சொல்லுகிறபடியே சரணுகதனுக்கு வேண்டியதை இந்தத் தாய் முயல் காட்டியது; 'சரணம் அடைந்தால் ஆண்டவன் நம்மை அவசியம் காப்பான்' என்ற திடமான நம்பிக்கை மனிதர்க்கு ஏற்படுவது அரிது; இது தாய் முயலுக்கு ஏற்பட்டது. சரணமாகுந்தன தாளடைந்தார்க் கெல்லாம்' என்றவாறு உபதேசமின்றியே யார் தன்னை அடைந்தாலும் காக்கும் இயல்பு கொண்ட இறைவனது ஈர நெஞ்சத்தை இந்த வேடன் காட்டினன். வெறுங் கையினராகிய நாமும் இறைவ னிடம்நமக்கு அவனன்றி வேறு புகல் இல்லை என்று விண்ணப்பம் செய்தால் நம்மை ஒருபோதும் கைவிட மாட்டானல்லவா! அன்பாலும் தயையாலும் இளகிய ஈர நெஞ்சனல்லவா!'' என்று பலவாருகக் கூறிக்கொண்டு அன்றிரவு முழுதும் பரமனது கருணையைப் பற்றிப் பேசிக்கொண்டே துயில்கொள்ளாமல் கட்டிலின் மீதே அமர்ந்திருந்தார். மறுநாட் காலையில் அவ்வேடனை வாழ்த்தி, அவனிடம் விடை பெற்றுக்கொண்டு வடக்கு நோக்கிப் பயணமானர். ❋

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

ஊரில் நம்மை சும்மா விடுவார்களா? சினேகிதனின் மனிதர்கள் என்னைப் போலீஸில் வைத்துவிட மாட்டார்களா... இது போல் பயங்கர கற்பனைகள் உண்டாகி வதைத்தபோது, இனி அரை நிமிஷங்கூட நிற்காமல் உடனே அவ்வூரை விட்டுப் புறப்படுவதைத்தவிர வேறு வழியே தெரியவில்லை.

❋

## ஆறுமுகம்

சிறுமி:—இதென்னம்மா... வீட்டில் யாரைப் பார்த்தாலும் ஆறுமுகமாகவே காட்சியளிக்கிருர்களே ?

தாயார்:—இது என்னடீ... உளறுகிறே...

சிறுமி:—உளரலேம்மா...யார் முகத்தைப் பார்த்தாலும் வியர்வை ஆருய் ஓடுகிற தேன்னு அப்படிக்கேட்டேன்...

# அவனே கடவுள்!

பி. எஸ். அரவிந்தா.

—(சென்ற இதழ் தொடர்ச்சி)—

✻ ✻

சினேகிதனைப் பார்க்கப் பார்க்க பற்றி எறிந்தது எனக்கு. என்னுடைய பணப்பெட்டியும், பையும் 25 நயாபைசாக்களைக் கூடத் தாங்கும் சக்தி இன்றி துவண்டு கிடப்பதை யார் அறிவார்கள்? கோபத்தோடு முறைதேன். இந்தத் தர்ம சங்கடமான நிலைமையில் ஒரு குருட்டு பிச்சைக்காரன் வாசலில் வந்து தனது இனிய குரலால்,

"கடலின் அலைக்கும் ஓய்வில்லை,
கள்ள மனத்திற்கும் ஓய்வில்லை,
திடமுற்று வாழவும் வழியில்லை,
தேன்போன்ற சொல்லிற்கும்
இனிப்பில்லை,
உடம்பின் வலிமைக்கும்
உணவில்லை
உள்ளத் துடிப்பிற்கும்
பஞ்சமில்லை.

என்று அவன் ஒப்பாரி வைப்பதைப் போல் பாடுவதைக் கேட்டதும் எனக்கு வந்த ஆவேசத்தில் நான் என்னை அறியாமல் நான்காவது அவதாரமே எடுத்துவிட்டேன். ஒரே தாவில் வாசலுக்கு ஓடினேன். குருடன் என்பதையும் பார்க்காமல் வாயில் வந்தபடி திட்டிவிட்டு முதுகில் இரண்டு அரை கொடுத்து மேல் படியிலிருந்து அப்படியே தள்ளிவிட்டேன்.

நல்ல வேளையாய் தெருவில் ஜன நடமாட்டமே இல்லை. அவனைப் பிடித்துத் தள்ளினேனே தவிர அவன் உருவம் என் கண்களில் புகைப்படம் போல் பதிந்தது. ஆனால் என் உருவத்தை அவன் காணவில்லை. பிரதி தினம் நூற்றுக் கணக்கான வெசவு, கோபச் சுடுசரம் போன்ற வார்த்தைகளைக் கேட்டு கேட்டு துருவேறிப் போன காதுகளில் இந்தக் கொடுஞ் சொல்லின் குரல் எப்படி நிலைத்திருக்க முடியும். திட்டிய நானே திகைக்கும்படி ஒரு சோகச் சிரிப்பு... கிராசையின் பெருமூச்சு, இரண்டுடன் மறைந்தான்.

பிறகு பல வருஷங்கள் மறைந்தோடியது. குருடனைப் பற்றிய எண்ணமே மறந்துவிட்டிருந்தேன். ஆனால் எனக்குக் கண்ணில் கோளாறு உண்டாகிப் பாதை படும் போதும், ஆஸ்பத்திரியில் காட்டிய போதும் இத்தனை வருஷமாக மறந்துபோய் இருந்த குருடன் நினைவு பளிச் சென்று வந்து என்னைப் பய மூட்டியது. பல டாக்டர்களிடம் கண்ணைக் கொண்டு காண்பித்தேன். நன்றாய் தெரிந்து கொண்டிருந்த கண்கள் திடீரென்று மறைந்துவிட்டு இருப்பதால் ஏதோ ஒரு வித நீர் வந்து கண்ணை மறைத்துவிட்டதாயும், அந்த ஆபரேஷன் ரொம்பப் பயங்கரமானது என்றும் ஆபரேஷனை விட அதற்கு முந்தியும் பிந்தியும் உடலைத் துளிகூட அசையாது கண்களை அதிகம் சிமிட்டாமலும் சுற்று முற்றும் பார்க்காது முழியை ஒரே நிதானமாகவே பார்ப்பதும், தும்மல் கூடாது, இருமல் கூடாது, ஆகாரத்தைச் சட்டென்று

விழுங்கக் கூடாது இப்படியாக அவர்கள் போடும் உத்திரவுகளைப் பார்த்தால் என்பாடு நடுக்கமே எடுத்துக்கொண்டு விட்டது. சரியான சித்திரவதை என்ருல் தகும். இத்தனை சித்திரவதைப் பட்டாலும் கண் வரும் என்ற நிச்சயமில்லை. என்னைப் பார்த்த எல்லா டாக்டர்களும் "சார், ஏதோ எங்களால் முடிந்தவரை கண் நன்ருய் வரும் வழிபார்க்கிருேம். ஆனல் கட்டாயம் வரும் என்று நிச்சயம் இல்லை. உங்களுக்கு அதிரிஷ்டம் இருந்தால்தான் கண் பார்வை கூடும்" என்று ஒரு பொடி வைத்துத்தான் சொன்ஞர்கள். அப்போதுதான் குருடனின் சோக சிரிப்பின் பயங்கரமும் நிராசையின் பெருமூச்சும் என்னை சாபமிடுவதுபோல் தோன்றி என் முட்டாள் தனத்தை எடுத்துக்காட்டியது. கலி கால தெய்வம் கைமேல் பலனைக் கொடுக்கும் என்பது என் விஷயத்தில் சரியாய்விட்டது. என் ஹிருதயத்தில் வாட்டி வதைக்கும் குருடனின் விஷயம் டாக்டர்களுக்கு என்ன தெரியும். நான் ஆபரேஷனுக்குத்தான் பயப்படுவதாய் நினைத்து எனக்கு ப்ரமாதமாய் தைரியம் சொல்ல தொடங்கி விட்டார்கள். "இதோ பாருங்கள் சாந்தமூர்த்தி, உங்களுக்கு வேணுமானல் ஆபரேஷன் என்ருல் பயம் இருக்கும். எங்களுக்கு இது சர்வசாதாரணமான ஆபரேஷனில் சேர்ந்தது. ஆனல் ரொம்ப ஜாக்கிரதையாய் செய்ய வேண்டியது. உங்களுக்குத்தான் முன்னும் பின்னும் சித்திரவதை. பாவம்! உங்களுக்கு என்னவோ ஆபரேஷன் செய்து கொள்ளாவிட்டாலும் கண் இல்லை; செய்து கொண்டாலும் வரும் என்ற நிச்சயமில்லை' ஒருவேளை வருமோ என்ற எதிர்பார்ப்பினல்தான் இந்த அவஸ்தைகளை சகித்துக்கொள்ள வேண்டும்" என்று எனக்கும் பிரமாதமாய் தைரியம் சொல்லிக் கொண்டுஇருந்தார்கள். ஆனல் என் உள்ளத்தில் செய்யும் சித்திரவதையை விடவா இந்த அவஸ்தை அதிகமாய் இருக்கப் போகிறது? நான் செய்த பாபத்திற்கு இந்த ஆபரேஷன் சரியான தண்டனை என்றுதான் நான் சந்தோஷித்தேன். உலகத்தில் எல்லோரும் தமக்கு கஷ்டமோ வியாதியோ வந்துவிட்டால் தங்கள் குலதெய்வங்களை நான் அங்கப்பிரதக்ஷிணம் செய்கிறேன். உண்டியில் காணிக்கை செலுத்துகிறேன் முடி இறக்குகிறேன். குடும்பத்தோடு உன்னைத் தரிசிக்கிறென். உத்ஸவங்கள் செய்து வைக்கிறேன். இப்படியாக பலவிதமாய்ப் பிரார்த்தனைசெய்து கொள்வார்கள். அதன்படி எனக்காக உமா எத்தனையோ வேண்டுதல் வேண்டிக்கொண்டாள். ஆனல் நான் அவளைத் தடுக்கவில்லை. உண்மையில்பகவானுக்குஒரு வேண்டுதலும் வேண்டவில்லை நான். ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆன அன்று எப்படி பிரார்த்தனை செய்து கொண்டேன் தெரியுமா? நான் இந்தக் கண்டத்தில் தப்பிப் பிழைத்துக் கண்கள் ஊனமில்லாமல் எழுந்தால் உடனே அந்தக் குருடனைத் தேடிப் பிடித்துக் காலில் விழுந்து வணங்கி அவனை அவன் காலம் வரை என் வீட்

டோடு வைத்து ஆதரிக்கிறேன் என்று வேண்டிக் கொண்டேன். இதை என் மனதோடு வைத்து குமையும் சக்தி அப்போது எனக்கு இல்லை. இதை உமாவிடம் சொல்லி என் மன பளுவைக் குறைத்துக் கொள்ளத் துடித்தேன். இந்த விஷயத்தைக் கேட்ட உமா சந்தோஷத்தால் பூரித்து "பகவான்கிருபையில் உங்கள் கண் நன்றாய் ஆகட்டும். அந்தக் குருடனை தேடிப் பிடித்து என் தகப்பனார் போல் நான் ஆதரிக்கிறேன்" என்று உறுதியாய்ச் சொன்னாள். அவளுடைய அனுசரணையான பதிலே எனக்கு கண்கள் வந்து கிழவனை ஆதரித்த சந்தோஷம் வந்து விட்டது. அதன் பிறகு தான் அதிகமாய் என் மனதை வாட்டிய கவலை கொஞ்சம் குறைந்தது.

சில தினங்களிலேயே ஆபரேஷனும் செய்து முடிந்தது. அன்றுதான் டாக்டர் என்கண் கட்டை அவிழ்த்து கூடி இருக்கிறதா என்று பார்ப்பதாய்ச் சொல்லி இருந்தார். என் மனதில் என்னை அறியாது பலவிதமான எண்ணங்கள் அலைமோதிக் கொண்டிருந்தது. டாக்டரும் குறிப்பிட்ட நேரத்தில் வந்து சேர்ந்தார். என் கட்டின் மேல் அவர் பரிசம் பட்டதுதான் தாமதம், என் உடல் பூராவும் ஒரு வித உணர்ச்சி தோன்றி ஒருகுலுக்குக் குலுக்கியது. டாக்டர் கட்டை அவிழ்த்து கண்ணைப் பரீட்சை செய்து பார்த்து, "சார்,வெற்றி ...நாம் எடுத்த காரியம் வெற்றி ...இழந்த கண்களை நீங்கள் பெற்று விட்டீர்கள். நான் எடுத்த காரியத்தில் ஜெயம் பெற்றுவிட்டேன்" என்று ஆனந்தத்தால் கூவிவிட்டார். குருடன் கண்களை வேண்டாது எதை வேண்டுவான்? எனக்கு உண்டான ஆனந்தத்தில் சற்று நேரம் உலகையே மறந்தேன், என்றால் மிகையாகாது. டாக்டர் திரும்பவும் என் கைகளைப்பிடித்துக்கொண்டு "ஸார் இது ரொம்பவும் பயங்கரமான ஆபரேஷன் ஸார்! உங்கள் அதிர்ஷ்டம்தான் உங்கள் கண் வந்தது; வரும் என்று நான் நினைக்கவே இல்லை. நீங்கள் நல்ல பாக்கியசாலிதான். முன்பே ஆபரேஷன் ஆபத்தானது என்று சொன்னால் எங்கு நீங்கள் பயந்து நடுங்கி விடுவீர்களோ என்று சொல்லவில்லை; உங்களைவிட எனக்குத்தான் இன்னும் ஆனந்தமாய் இருக்கிறது." என்று தன் உணர்ச்சி பூராவும் கொட்டி சொன்னார். எனக்கு எற்பட்ட ஆனந்தத்தில் பிரதிவந்தனம் கூட செய்யத் தெரியவில்லை. சந்தோஷத்தால் நெஞ்சை அடைத்து விட்டது.எனக்கு கண்வந்த சந்தோஷத்தைவிட இந்த கண்ணைக் கொண்டு எப்படியாவது திரிந்து அலைந்து குருடனைக் கட்டாயம் கண்டுபிடித்து விடலாம் என்றுதான் சந்தோஷம் பொங்கியது.என் அந்தஉணர்ச்சியைக் கவனித்த டாக்டர், "சார் நீங்கள் இப்போது அதிக உணர்ச்சிகளுக்கு இடம் தரக்கூடாது. அதனால் நரம்புகள் அசையும். நரம்பின் அசைவு கண்களுக்கு இப்போது கெடுதல். உணர்ச்சியைக் கட்டுப்படுத்துங்கள்" என்று நொடியில் அடக்கிவிட்டார். கடவுள் கிருபையால் கண்கள் வெகு

தெளிவாகப் பார்வையைப் பெற்று உலகத்தைப் பார்த்து மகிழும் பாக்கியத்தைப் பெற்றேன். அன்று முதல் குருடனை தேடிப்பிடிக்கும் வேலையில் மும்முரமாய் அலையத் தொடங்கினேன். சாதாரணமாய் பிச்சைக்காரர்கள் பெரிய பெரிய கோவிலின் கோபுர வாசல்களிலும் திருவிழாக்கள், உற்சவங்கள் நடக்குமிடங்களிலுந்தான் இருப்பார்கள். ஆதலால் எங்கு திருவிழா நடக்கிறது, எங்கு பெரிய கோவில்கள் இருக்கிறது, உற்சவாதி நடக்கும் இடங்கள் இப்படியாக விசாரித்து விசாரித்துப் போய் அலைந்து தேடினேன். ஆனால் குருட்டு பிச்சைக்காரனை தவிர யாரார்ரோ இருக்கிறார்களே தவிர அவனைக் காணவில்லை. ஆனால் அதனால் என மனது யன்றி வில்லை. மேலும் ஊர் ஊராய்ச் சுற்றித் தேடிக்கொண்டேதான் இருந்தேன்- ஒரு ஊர்த் திருவிழாவில் ஸ்வாமியை தரிசித்துக்கொண்டேயிருக்கையிலும் குருடன் கிடைக்கவில்லையே என்ற ஏக்கமே என் இதயத்தில் போராடிக்கொண்டு இருந்தது. அந்த சமயம்,

"கடலின் அலைக்கும் ஓய்வில்லை,
கள்ள மனதிற்கும் ஓய்வில்லை,"

அன்று குருடன் பாடிய அதே பாட்டு அதே சாரீரம் என் காதுகளில் வந்து ஒலித்தது. அந்த குருடனின் தரிசனம் அப்போது கிடைக்காவிட்டாலும் அவனுடைய கானம் செவி வழியே புகுந்து என் இதயத்தை நிரப்பியது. அப்போது அது என் காதுகளுக்கு பாட்டாகவே படவில்லை. அமிர்த வர்ஷமே என் காதில் பொழிவதுபோல் இருந்தது. அத்தனைக் கூட்டத்தையும் விலக்கிக்கொண்டு பாட்டு வரும் திசையை நோக்கி பித்தனைப்போல் விரைந்தேன். என்ன ஆச்சர்யம். 'அன்று பார்த்த கண்ணிற்கு அழிவில்லை' என்று சொல்வார்கள். அதுபோல் குருடன் தன் ரூபத்தில் ஒரு இம்மி அளவும் மாருது அப்படியே காட்சியளித்தான். ஓடிச்சென்று அவன் கைகளைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு கண்ணீர் பெருக "அப்பா, ஒருசமயம் ஒரு வெறியன் உன்னைக் கண்டவாறு திட்டி படியில் உருட்டித் தள்ளினேனே...உனக்கு நினைவு இருக்கிறதா? அந்தப் பாவி நான்தான். அன்று கேவலம் மிருகமாகவே இருந்தேன். ஆனால் இன்று மனிதனாய் இருக்கிறேன். உன்னை ஹிம்சித்ததற்கு தக்க தண்டனையை அனுபவித்துவிட்டேன். என்னை மன்னித்து என்னுடனே இருக்க வா;" என்று உணர்ச்சிபூராவும் கொட்டி அவனிடம் மன்னிப்புக்கோரினேன். சோக சிரிப்பு சிரித்தவாறே, "ஐயோ! மகனே! இந்த ஏழைக்கு இனிமேல்போகமும்உபசாரமும் எதற்கு?" என்று தன் கௌரவத்தைவிடாதுவரமறுத்தான். பலவாறு மன்ருடி குருடனிடம் என் வரலாற்றை யெல்லாம் கூறி என்னுடன் அழைத்துக் கொண்டு வந்து என் பிரார்த்தனையை நிறைவேற்றி விட்டேன். அன்று ராட்சஸனுகயிருந்த நான் இன்று மனிதனுகவே இருக்கிறேன்.

●

# காளிதாஸர் கனவு

## 11, இராம தர்சனம்: ரகுவம்சம்.

[ஸ்ரீ. கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி]

[டிசம்பர் இதழ்த் தொடர்ச்சி]

அஜனும் மற்ற மன்னர்களும் இந்துமதியின் சுயம்வர மண்டபத்தை அடைந்தார்கள். அங்கே இந்துமதி மணக் கோலத்துடன் பட்டாடை உடுத்து ஒப்பற்ற நகைகள் பூண்டு ரதிதேவிபோல் பல்லக்கில் வந்து இறக்கிக் கொலுமண்டபத்தில் தோழிகளுடன் வந்தாள். அவளுடைய தோழி ஒவ்வொரு அரசனையும் சுட்டிக்காட்டி அவனுடைய நாடையும் பெருமையையும் வர்ணித்துக்கொண்டே சென்றாள். இந்துமதிதேவியும் ஒவ்வொரு அரசனையும் தாண்டிச் சென்றாள். ஒரு தெருவில் இரண்டு பக்கங்களிலும் மாளிகைகள் இருக்க ஒருவன் இரவில் விளக்கைக் கையில் ஏந்தி ராஜவீதி வழியாகச் சென்றால் எப்படி தீபம் நெருங்கிய பொழுது வீடுகள் விளங்கித் தீபம் அகன்றவுடன் ஒளி மழுங்குமோ, அப்படி அந்தத் தங்க தீபம் போன்ற இந்துமதி அந்த மன்னர்கள் வரிசை நடுவில் செல்லசெல்ல எந்த மன்னன் முன் அவள் நெருங்கி வந்தாளோ அவன் மனம் மகிழ்ந்து முகம் மலர்ந்து அவள் அவனைத் தாண்டிச் சென்றவுடன் அவன் மனம் வருந்தி முகம் ஒளி மழுங்கி இருந்தான்.

> ஸஞ்சாரிணீ தீபசிகேவ ராத்ரௌ
> ய: ய: வ்யதீயாய பதிம் வராஸா |
> நரேந்த்ர மார்காட்ட இவப்ரபேதே
> விவர்ணபாவம் ஸஸ பூமிபால: ||

அவள் அஜமகாராஜனிடம் நெருங்கிய பொழுது இந்துமதியின் தோழி சுநந்தா "இந்த அரசர் கதிரவன் வம்சத்தில் பிறந்தவர். ரகுமகாராஜனுடைய புதல்வர். ரகுமகாராஜன் விசிவஜித் யாகஞ் செய்து உலகம் முழுவதிலிருந்தும் கொண்டுவந்த பொருள்கள் யாவற்றையும் தானமாகக் கொடுத்துத் தனக்கு மண் பாத்திரங்களை மட்டும் வைத்துக்கொண்டார். இவரே உனக்குத் தகுந்த மணமகன்!'' என்று கூறினாள். இந்துமதி அஜமகாராஜனை நோக்கி அவனுடைய சிங்கார உருவத்தையும் கம்பீரமான காட்சியையும் கண்டு அவனுக்கு மாலையிட்டாள். அதை ஊர் ஜனங்கள் எல்லோருங் கண்டு களித்தார்கள். வெண்ணிலாத் திங்களைச் சேர்வது போலும் கங்காதேவி சமுத்திர ராஜனை அடைவது போலும் அந்த மணம் அழகாகவும் பொருத்தமாகவும் உள்ளதாகப் புகழ்ந்தார்கள். பிறகு அஜமகாராஜனுக்கும் இந்துமதி தேவிக்கும் திருமணம் நடந்தது.

திருமணத்திற்குப் பிறகு அவர்கள் தேரிலமர்ந்துத் தங்களுடைய கோசல தேசம் போகும் வழியில் சுயம்வரத்திற்கு

வந்திருந்த மற்ற மன்னர்கள் வழிமறித்துப் போர் செய்தார்கள். அஜன் அவர்களுடன் ஆச்சர்யமான முறையில் போர்புரிந்து சம்மோகனாஸ்திரத்தை ஏவி அவர்களை மயங்கிக் கீழே வீழ்த்தி இந்துமதிதேவியுடன் தன்னுடைய அயோத்தி நகரத்தை யடைந்தான்.

பிறகு ரகுமகாராஜன் அஜனுக்குப் பட்டம் சூட்டித் தான் துறவறம் பூண்டு காட்டுக்குச் செல்ல விரும்பினான். அஜன் அவனைச் சில காலமாவது தன்னுடன் இருக்கவேண்டியதால், ரகு மகாராஜன் அவ்வேண்டுகோளுக்கிணங்கி நகரத்திற்கு வெளியில் ஒரு ஆசிரமத்தில் வசித்தான். ஆனால் உரித்த சட்டையை விரும்பாத பாம்பைப்போல் ரகு அரசாட்சியை விரும்பவில்லை. யதிராஜனாக விளங்கும் ரகுவும் ராஜராஜனாக விளங்கும் அஜனும் மோக்ஷஸாம்ராஜ்யமும் லோகஸாம்ராஜ்யமும் போல் விளங்கினார்கள்; அஜன் மந்திரிகளுடன் கூடியிருந்தான். ரகு யோகிகளுடன் கூடியிருந்தான். அஜன் சிங்காதனத்திலமர்ந்தான். ரகு தர்ப்பை ஆதனத்திலமர்ந்தான். அஜன் பகைவர்களை வென்றான். ரகு சமாதிநிலையில் பிராணவாயுவை அடக்கி வென்றான். அஜன் எதிரிகள் பலத்தை எரித்துச் சாம்பலாக்கினான். ரகு ஊழ்வினையை ஞானத்தீயால் எரித்துச் சாம்பலாக்கினான். அஜன் தன் கருத்து வெற்றியடையும் வரையில் வெற்றி முயற்சியிலே ஈடுபட்டிருந்தான். ரகுக்கடவுளைக் கண்டு அடையும் வரையில் யோக முயற்சியில் ஈடுபட்டிருந்தான். அஜன் வெளிச் சத்ருக்களை முறியடித்தான். ரகு உள்ளத்தில் உள்ள பகைவர்களை முறியடித்தான். அஜன் பூமியை ஆண்டான். ரகு தன்னையே ஆண்டான். இப்படிச் சில காலஞ் சென்றபின் ரகு பரமபதமடைந்தான்.

## அஜமகாராஜன் சரித்திரம்

பிறகு அஜன் செங்கோல் செலுத்தி மனுநீதி தவறாமல் ஆண்டுவந்தான். ஒரு நாள் அவன் இந்துமதி தேவியுடன் தோட்டத்தில் களித்திருந்தபொழுது நாரதர் வீணாகானஞ் செய்துகொண்டு கோகர்ணத்தில் பரமசிவனை தரிசனஞ் செய்யச் சென்றார். அப்பொழுது அவ் வீணையிலிருந்த பூமாலை நழுவி கீழே இருந்த இந்துமதியின்மேல் விழுந்தது. உடனே அவள் மூர்ச்சையடைந்து மரித்தாள். தாங்கக்கூடாத துன்பத்தை யடைந்த அரசன் வருந்தித் துக்கத்திலாழ்ந்து "ஐயோ! இப்படியுமுண்டா? பூவுங் கொல்லுமோ? பனிபட்ட தாமரைபோல் வாடிவிட்டாளே. இந்த மாலையை நான் அணிந்தால் அது என்னையுங் கொன்று அவளுடன் பரலோகம் அனுப்புமோ என்று எண்ணி அதை நானணிந்தும் அது என்னை ஒன்றுஞ் செய்யவில்லையே. ஈசனின் ஆணைப்படி விஷமும் அமிர்தமாகும் அமிர்தமும் விஷமாகும். என் பாவமே இந்த மாலையாக உருவெடுத்து இவள்மேல் இடிபோல் விழுந்ததோ? ஒருவேளை என் அன்பு மெய்யன்பு அன்றென்று எண்ணித்தான் அவள் பொன்னுலகம் சென்றனளோ? ஆனால் நானே என் உடல் பொருள்

ஆவியாவும் அவளுடையதென்றே எண்ணியிருந்தேனே. இன்றுடன் என்னுடைய துணிவும், இன்பமும், கலையும், அலங்காரமும், அவளுடனேயே இறந்தன. அவள் என்னுடைய மனைவி, மந்திரி, தோழன், கலா மாணவி; அவளைக் கொண்டுபோன யமன் எனக்கு ஒன்றையும் பாக்கி வைக்கவில்லை'' என்று புலம்பினான்.

விசஷ்டர் தன் மாணுக்கரை அனுப்பி அரசனைத் தேற்றினார்: ''மன்னவனே! நீ உன் துயரத்தைப் பொறுத்துக்கொள்ள வேண்டும். முன்னொரு காலம் திருணபிந்து என்ற முனிவர் தவஞ் செய்யும்பொழுது இந்திரனால் அனுப்பப்பட்ட ஒரு தெய்வப் பெண் அவரது தவத்தைக் கலைக்க முயன்றாள். அவர் சினந்து அவளை மானிடப் பெண்ணாகும்படி சபித்தார். அவள் அவருடைய அடிகளில் விழுந்துத் தன் பிழையை பொருத் தருளும்படி அவரை வேண்டினாள். அவர் அவள் தேவலோக மலர்களைக் கண்டவுடன் தேவலோகமடையும்படி அனுக்கிரகித்தார். அதனால்தான் அவள் பொன்னுலகத்தை அடைந்தாள். பிறந்தவர்கள் இறப்பது திண்ணம். பூமியை நன்கு கவனித்துக் கடமையைச் செய்ய அரசனுக்கு பூமியே தேவி. உயர்நிலை வந்தபொழுது எந்த நூலால் கர்வமின்றி வாழ்ந்தாயே அதால் துன்பம் வந்தபொழுது ஆண்மையுடன் விளங்கவேணும். நீ அழுதாலும் கூட மரித்தாலும் அவளை அடைய முடியாது. பரலோகம் போகின்றவர்கள் அவரவர்கள் செய்கைகளின்படி வெவ்வேறு வழியாகப் போகின்றார்கள். பிறந்தவர்களுக்கு இறப்பு இயற்கை, இருப்பு ஆச்சர்யம். ஒருகணம் உயிர் வாழ்ந்தாலும் அதே பெரிய லாபம்'' என்று உபதேசித்தார். முக்காலமுமறிந்த முனிவர் மொழியைக் கேட்ட மன்னவன் கொஞ்சம் தேறுதலடைந்தான். இப்படியே அவன் எட்டு ஆண்டுகளைக் கழித்தான். ஆனாலும் அவனுடைய துயரம் அவனுக்கு அதிகமான பிணியை உண்டாக்கியது. அவன் தானும் இறந்து தன் தேவியையடைய அவாவுள்ளவனாகச் சிலகாலம் வாழ்ந்திருந்து உயிர் துறந்தான்.

## தசரதமகாராஜன் சரித்திரம்

அஜனுக்குப் பிறகு அவன் மகனான தசரதர் வெகுகாலம் நீதியோடு அரசாட்சி செய்தார். அவர் வேட்டை, சூது, கட்குடி முதலிய தீய ஒழுக்கமே இல்லாமல் நல்லொழுக்கம் வாய்ந்த புண்ணிய புருஷர்.

ஈகையில் சிறந்தவர். பொய் கொடுமையொழிந்த வாய்மொழி வாய்ந்தவர். கடலை யாடையாகவுடுத்த பூமியை அவர் முழுவதும் வென்று ஒரு குடையின்கீழ் ஆண்டார். இந்திரனுக்கு உதவிபுரிந்து அவனால் ஆதரிக்கப்பட்டார். அவர் கௌஸல்யை, சுமித்ரை, கைகேயி என்று மூன்று இராணிகளுடன் விளங்கினார். ஆனால் அவர் தனக்கு மக்கட்பேறு இல்லையே என்று துயரப்பட்டிருந்தார்.

ஒருநாள் அவர் குடிகளின் வேண்டுகோளுக்கிறங்கி வேட்டையாடச் சென்றபொழுது யானை நீரருந்தும் சத்தம்போல் தோன்றியதால் அச்சத்தம் வந்த வழியிலேயே அம்பை எய்தார். அது அங்கே தண்ணீர் மொண்டிருந்த ஒரு சிறுவன் மீது பாய்ந்தது. உடனே அவன் காயமடைந்து கோவென்றலறிக் கீழே விழுந்தான். அவர் ஓடிச்சென்று பார்த்துத் திடுக்கிட்டார். "நீர் செய்தது என் பாபத்தாலேயே நேர்ந்தது. நீர் கெட்ட எண்ணத்துடன் செய்யவில்லை. என் தாய் தந்தைகள் குருடர்கள். நான் காலத்தில் செல்லாவிட்டால் அவர்கள் வருந்துவார்கள். அவர்களிடம் என்னைச் சேர்ப்பிக்க வேண்டும்" என்று வேண்டினன். அவர் மிக்கவும் துக்கப்பட்டு அப்படியே செய்ய, அவனுடைய தந்தை கோவென்றழுது, "என்போல் நீரும் மகனைப் பிரிந்து மரிக்கவேண்டும்" என்று தசரதரைச் சபித்தார். வயலை எரித்த நெருப்பு பயிருடைய வளர்ச்சியை விருத்தி செய்வதுபோல் அவருடைய சாபமும் மக்களே இல்லாத அரசனுக்கு அனுக்கிரகமாகவே முடிந்தது.

சாபோப்யதிருஷ்டதனயானனபத்மசோபே
ஸானுக்ரஹோ பகவதாமயி பாதிதோயம் |
க்ருஷ்யாம் தஹன்னபிகலு க்ஷிதிமிந்தனோத்தோ
பீஜப்ரரோஹ ஜனனீம் ஜ்வலன:கரோதி ‖

உடனே அவர்களிருவரும் தசரதரை நோக்கி, "எங்களையும் மகனுடனே எரித்துவிடுங்கள்" என்று வேண்டி உயிர்துறந்தார்கள். அவரும் அப்படியே செய்து வருத்தத்துடன் அயோத்தியை அடைந்தார்.


பிறகு காளிதாசர் என்னிடம் கூறினர்: "இந்த இடத்திலிருந்து ஆரம்பித்து ராமர் கதையை நான் சுருக்கமாகக் கூறுவதற்குக் காரணம் சொன்னேனல்லவா? ஆனுல் வால்மீகி கூருமலோ, அல்லது சுருக்கிக் கூறியோ சென்ற இடங்களில் நான் விவரமாகக் கூறியிருக்கிறேன். பகவானை அவதரிக்கும்படி கேட்டுக்கொண்ட இடம் அத்தகைய ஒரு இடம்."

தேவர்கள் மகாவிஷ்ணுவைப் பின்வருமாறு துதித்தார்.

"மும்மூர்த்திகளாக விளங்கும் ஆதிமூலப் பொருளே! எல்லாமறிந்து எல்லாம் வல்ல எங்கும் நிறைந்த பரம்பொருளே! உன்னையடையும் வழிகள் வெவ்வேருக இருந்தாலும் அவைகள் ஆன்மாக்களை உன்னிடமே கொண்டுபோய் சேர்க்கின்றன. உன் அன்பே உன் அவதாரங்களுக்குக் காரணமன்ரு? எங்களைக் காப்பாற்ற வேண்டும். அபயம், அபயம்" என்று முறையிட்டார்கள்.

நமோவிச்வ ஸ்ருஜே பூர்வம்
விச்வம் ததனுபிப்ரதே |
அதவிச்வஸ்ய ஸம்ஹர்த்ரே
துப்யம் த்ரேதாஸ் திதாத்மனே ||
ரஸாந் தராண் யேகரஸம்
யதா திவ்யம் பயோச்னுதே |
தேசேதேசேகுணேஷ்வேவ
மவஸ்தாஸ் த்வம விக்ரிய: ||
ஸர்வக்ஞஸ் த்வம விஞ்ஞாத:
ஸர்வயோனிஸ் த்வமாத்மபூ: |
ஸர்வப் புரணீசஸ் த்வ
மேக ஸ்த்வம்ஸர்வரூபபாக் ||
பஹுதாப்யா கமைர்பின்ன:
பந்தான ஸ்ஸித்தி ஹேதவ: |
த்வய்யேவ நிபதந் த்யோகா
ஜாஹ்ன வீயாயதார்ணவே ||
அனவாப்தம வாப்த வ்யம்
நதேகிஞ்சன வித்யதே
லோகா னுக்ரஹ ஏவாஸௌ
ஹேதுஸ்தே ஜன்மகர் மணோ: ||

பகவான் மனமிரங்கி அவர்களுக்கு அபயமளித்தார்.''




183219

# நிவர்த்தி

★

மாலதியின் சிந்தனை கட்டுக் கடங்காது பறந்து சென்று கொண்டிருந்தது. சிந்தனையின் சர்யல் முகத்தை மாற்றியது. அவள் மனதில் குப்பம் கும்பி: கேள்விகள் கேவி எழுந்தன. எண்ணமோ குறையை எட்டித்தள்ளத் துடித்துத் தவித்தது.

ஊஞ்சல் கம்பிகளில் கையை பிடித்து அமர்ந்தவாறு, மோட்டுவளையில் கண்ணைப் பதித்தாள்.

“மாலதி! அப்பா, அடுத்த ஊரிற்குச் சென்றிருக்கிருர். வருவதற்குள் இரவு கவிந்துவிடும். நானும் அத்தை வீட்டுக்குப் போய் வருகிறேன். கதவை நன்ருகத் தாழ்பாளிட்டுக் கொண்டு, ஜாக்கிரதையாயிரம்மா” என்று கூறியவாறே மாலதியின் தாயார் உள்ளிருந்து வெளிப்பட்டாள்.

சிறகடித்த சிந்தனையை சிதறடித்து விட்டு, மாலதி எழுந்தாள். சிலநாழிகைக்குள் அவள் தாயாரும் தலப்பை இழுத்துச் சொருகியவாறு தெருவில் இறங்கினுள். மாலதியை அறியாமலே அவள் நெஞ்சம் ஏனே குறையால் ஏங்கியது. பெருமூச்சு முட்ட அமர்ந்தாள்.

சில நாட்களாக அவளுக்குள் எழுந்து வாட்டத் தொடங்கியிருந்த அந்தக் கேள்வி மீண்டும் எழுந்தது. “நாம் என்ன பரம ஏழைக் குடும்பத்திலும் பிறக்கவில்லையே. பின் ஏன் அப்பாவும் அம்மாவும் எனக்கு வயதான பிள்ளையையே கணவனுகத் தேடுகின்றனர். அதுவும் முதல் மனைவி இறந்த மகானுபாவரையே யல்லவோ தேடுகின்றனர். ஏன்? ஏன்?”

ஊஞ்சலின் முன் குறுக்கும் நெடுக்கும் அலைந்தாள். விடை கிடைத்தால்தானே? எங்கு சென்றமர்ந்தாலும் பொருந்தவில்லை. புத்தகத்தை எடுத்தாலும் படிக்க ஓடவில்லை. பூவேலையில் கைதேர்ந்த அவளை அதுவும் அழைக்கவில்லை. திடீரென்று ஒரு யோசனை குறுக்கிட்டு ஊக்கியது. ஒரு முறை சுற்றிப் பார்த்துவிட்டு பழைய மரப்பெட்டிகள் உள்ள அறைக்குச் சென்ருள். ஜன்னல் கதவைத் திறந்துவிட்டு பெட்டிகளை துழாவத் தொடங்கினுள். பழைய புத்தகங்களும், சாமான்களுமே அவளை வரவேற்றன? ஆனல் அவள் எதிர்பார்த்தது எங்கே?

அதோ! அந்தப் பெட்டியில் இருக்கும் என்று அறையின் மறுகோடிக்குத் துள்ளி ஓடினுள். திறந்தவுடனே மேல்புறத்தில் ஒரு புகைப்படம் தென்பட்டது. அவர்கள் வீட்டில் எந்தஒரு புகைப்படம்எடுத்தாலும் அதனடியில் படத்தில் காட்சி யளிப்பவர்களின் பெயர் குறிப்பிட்டிருக்கும். அதை நோக்கினுள். விசாலம்-விசுவநா

வை. மு. விஜயலக்ஷிமி

தன், என்று எழுதியிருந்தது. என்ன? நம் அப்பா—அம்மாவின் புகைப்படமா இது? அப்பாவைக் கண்டு பிடித்து விட்டேன். அப்போது இருப்பதற்கும் இப்போது இருப்பதற்கும் ஒருசில வித்தியாசங்களே தெரிகிறது. ஆனால் அம்மா! அப்போது இளம்பெண்ணாக இருந்திருக்கிருள். வயதுகூட இருவருக்கும் நிறைய வித்தியாசம் இருக்கும் போலிருக்கிறதே. இத்தனை நாளாக இந்தப் புகைப்படத்தை நான் பார்த்ததேயில்லை.

'ஹ—ம்...மேலே பார்க்கலாம்' என்று தள்ளினாள். ஒரு பெரிய காகிதப் பை வெளிவந்தது. அதில் பல புகைப்படங்கள்—அதுவும் மணமான தம்பதிகளின் புகைப்படங்களே நிறைய இருந்தது. அவைகளெல்லாம் ஒவ்வொன்ருகத் தள்ளிக்கொண்டே வந்தாள். கேட்டறிந்த பெயர்கள் தாம். ஆனால் பார்த்தறியாத உருவங்களாகத் திகழ்ந்தன. என்ன ஆச்சரியம்! தன் அப்பா—அம்மா புகைப்படத்தில் பார்ப்பதற்கு எப்படி அம்மா சிரியவளாகவும், அப்பா வயதானவராகவும தெரிந்ததோ, அப்படி சுமார் ஏழெட்டுப் புகைப்படங்கள் காட்சியளித்தன.

'ஏன் இப்படி ஜோடி அமைந்திருக்கிறது? எல்லோரையும் இரண்டாந்தாரமாகவேகொடுத்திருக்கிருர்களா? பெயர்களையெல்லாம் பார்த்தால் அம்மாவின் தங்கை, அக்கா இவர்களைப் பேர்ல் இருக்கிறது. ஒருவேளை அம்மாவின் தாய் வீட்டார் பரம ஏழைகளாயிருந்து எல்லோரையும் இப்படி தள்ளியிருப்பார்களோ? உம். நானும் இத்தனை நாளாக பள்ளி, படிப்பு, பாட்டு என்று இப்படி காலம் தள்ளிக் கொண்டிருந்தேன். இவைகளைப் பார்க்கவும், நம் உறவினர்களைப் பற்றியும், ஏன் நம் குடும்பத்தைப் பற்றி அறியவுமே வாய்ப்பில்லாது போய்விட்டது. நம் விட்டிலாவது ஏதாவதுகல்யாணம் பெரிய வைபவம் நடந்திருந்தால் அவர்கள் வந்திருப்பார்கள். என் கல்யாணம்தானே முதன் முதலில் நடக்கப்போகும் சுப காரியம். சிம்லாவிலும, டெல்லியிலும், ஜபல்பூரிலும் உள்ளவர்கள் எதற்கு வீணாக ஓடி வருகிருர்கள்? நம் அம்மாவின் பெற்ரோராவது உயிரோடிருந்திருந்தால் ஒரு கால் வரலாம். நானும் பார்க்கலாம். அற்கும் கொடுத்து வைக்கவில்லையே' — இப்படி கடந்த காலத்தை எண்ணிணாள்.

எல்லாவற்றையும் பார்த்தாகி விட்டது. இப் பெட்டியின் அடியில் இருக்கும் இந்த ஒரு புகைப்படம்தான் பாக்கி. அதுமட்டும் பல தாள்கள் சுற்றப்பட்டு பத்திரமாக வைக்கப்பட்டிருந்தது. அதைப் பிரித்ததும் மாலதி ப்ரமித்து விட்டாள், இது யார் புகைப்படம். எவ்வளவு அழகாக இருக்கிறது. மற்றவைகளைப் போல் இல்லாமல் இதில் பெண், பிள்ளை இருவரும் எவ்வளவு அழகாக, இளமையாக, மகிழ்ச்சியாக ஜோடி பொருத்தத்துடன் தோற்றமளிக்கிருர்கள்? பார்த்துப் பார்த்து மாளவில்லை. படத்தில் நயனங்களை பதிய வைத்து விட்டு, அரை மயக்

கத்தில் இருப்பவள் போல் அயர்ந்திருந்தாள். நேரம் போனதே தெரியவில்லை.

கதவு 'டபடப' வென்று இடி படும் ஓசை கேட்டது. மேலே கீழே இருந்தது எல்லா வற்றையும் எடுத்து பெட்டியில் அடைத்துவிட்டு ஓரே ஓட்ட மாக ஓடினாள்.

தன் தம்பி பாலு நிற்பதைப் பார்த்து "அப்பாடா! நீதானா?" என்றாள்.

"ஹூம். நான்தான். ஏய் சாப்பாட்டு ராமி! எத்தனை நேரம் கதவைத் தட்டுவது? என்ன செய்து கொண்டிருந் தாய்?" என்று ஆண்களுக்கே உள்ள அதிகாரத் தோரணை யில் மிடுக்காகக் கேட்டான்.

"பாலு! ரொம்ப அதிகா ரம் பலக்கிறதே. இப்போது தான் சற்றுகண்ணயர்ந்தேன்" என்றாள். தான் என்றும் பார்க் காத படங்களை அம்மாவிற்குத் தெரியாமல் பெட்டிகளைக் குடைந்து பார்த்ததில் ஏதோ குற்றம் செய்துவிட்டதுபோல் அவளுக்குத் தோன்றியது. அதனால்தான் கதவு ஓசை பட்டதும் அலறியவாறு ஓடி னாள்

பாலுவோடு பேசவோ, சண்டை செய்யவோ, அவள் மனது அப்போது செல்ல வில்லை. புகைப்படங்களையே சுற்றி வட்டமிட்டு, அதிலேயே லயித்துவிட்டது. மீண்டும் மாலதியின் நிஷ்டையை, தபால் காரன், தன் குரல் மூலம் கலைத் தான்.

"அட! மஞ்சள் தடவிய கடி தம்! அப்பா பெயர் போட்டிருக் கிறதே. யாரிடமிருந்து வந்தி ருக்கும்? ஒருவேளை நம் உறவி னர்கள் யார் வீட்டிலாவது கல் யாணப் பத்திரிகை அனுப்பி ருப்பார்களோ? நாம் பிரிக்க லாமா? அப்பாவின் கடிதமா யிற்றே'—கடைசியில் பிரிக் காது வைத்துவிட்டாள். அதில் என்ன விஷயமிருக் குமோ? என்ற ஆவல் மட்டும் அடங்காது கிளம்பியது.

தன் தாயார் எப்போது வரு வாள்? அவளிடம் எப்படி அந் தப் புகைப்படங்களைப் பற்றிய விஷயங்களை அறிவது? நாமே விஷயத்தைத்தொடங்கலாமா? ஒருவேளை இப்போது வந்திருக் கும் கடிதம் நமக்கு இவ்விஷயத் தில் உதவி புரிந்தால் அதை சாக்காக வைத்துக்கேட்கலாம். என்று தீர்மானித்தாள். அவள் குழப்பம் நீடிக்கவில்லை.

"மாலதி! ஏதாவது கடிதம் வந்ததா?" என்றவாறு அவள் தாயார் நுழைந்தாள். மாலதி மௌனமாகக் கடிதத்தை எடுத்துக் கொடுத்தாள்.

விசாலம் ஆவலோடு கடிதத் தைப் படித்துவிட்டு, முகமலர்ச் சியோடு அன்புததும்ப, "மாலா! நீ ஏன் கடிதத்தைப் பிறிக்க வில்லை. நல்ல சமாசாரம். உன்னைப் பெண் பார்க்க நாளை காலையில் வருகிறார்களாம்!" என்றாள்.

பெண் பார்க்க வருகிறார் களா? யார் வருகிறார்கள்? எப் படிப்பட்ட பிள்ளை? கிழவனா? குமரனா? இரண்டாம் தாரமா? என்றெல்லாம் கேட்டுவிட அவள் நா துடித்தது. கல்யா ணம் என்ற பேச்சைக் கேட்ட தும் சந்தோஷம் புரளாமல், துக்கமே அடைத்தது.

"ஏன் மாலதி! பேசாமலிருக்கிறாய்? பெரிய இடத்து சம்மந்தம்."

"ஓஹோ! அப்படியாம்மா? எந்த ஊர் அவர்கள்?"

"சென்னை தான். ஒரே பிள்ளையாம். பெற்றோர் இல்லையாம். இல்லாவிட்டால் என்ன? 37 வயதாகிறதாம். ஆண்பிள்ளைக்கு அது ஒரு வயதா? பசையுள்ளவன். ஜாதகமும் நன்றாகப் பொருந்தியிருக்கிறது" — என்று மாலதியை கேள்வி கேட்கவே இடம் வைக்காது, தானே, கேட்டு, விடை கூறி எல்லாவற்றையும் நிமிடத்தில் முடித்துவிட்டாள்.

"அம்மா! உன்னை ஒன்று கேட்கிறேன். எனக்குச் சொல்வாயா?" என்று குழைந்தாள் மாலதி. தாய் சந்தோஷமாயிருப்பதால் மறுக்கமாட்டாள் என்பது அவளுக்குத் தெரியாதா?

"அம்மா! இதோ இந்த பெட்டியிலிருக்கும் புகைப்படங்களைப் பார்த்தேன். எனக்கு ஒரு பெரிய சந்தேகம். இவர்களெல்லாம் நமக்கு என்ன உறவு? பிறகு இந்த அழகான இளம் தம்பதிகள் என்ன உறவு என்பதையும் சொல்லு"

"இதையெல்லாம் நீ எதற்குப் பார்த்தாய்?"

"பார்த்தால் என்னம்மா தவறு? உறவு முறைகளைத் தெரிந்து கொள்கிறேன்"

"அழகாக இருக்கும் தம்பதிகள் என் பெரிய அக்கா. அதாவது, எங்கள் குடும்பத்தின் மூத்தப் பெண். மற்றவர்களெல்லாம் என் சித்தி, அக்கா, தங்கை. இப்படிதான். அந்த பெரிய அக்கா இப்போது இல்லை. சரி சரி. எல்லாவற்றையும் வைத்து மூடிவிட்டு வா. எனக்கு வேலையிருக்கிறது" என்று உள்ளே சென்றுவிட்டாள்.

'ஏன் அம்மா! ஏதோ மாதிரி பேசி மழுப்புகிறாள். இன்று விடுவதில்லை' என்று தீர்மானித்தபடி பின்தொடர்ந்தாள். வேலை செய்துகொண்டே பேச்சு கொடுத்தாள் மாலதி.

"அம்மா! இப்போது கடிதம் எழுதியிருக்கிறாரே, அந்த பிள்ளைக்கு 37 வயது என்றால் முதல் மனைவி இறந்தவரோ?"

"அப்படித்தானிருக்கும். நான் அப்பாவை விவரம் கேட்கவில்லை."

"கேட்கிறேனே என்று வருத்தப்படாதே. எனக்குப் பார்க்கும் வரன்களெல்லாம் வயதான பிள்ளையும், இரண்டாம் தாரமாகவுமே பார்க்கிறீர்களே. அது ஏன்? இல்லை உலகத்தில் வேறு பிள்ளைகளே இல்லையா?"

"மாலதி! காரணமில்லாமல் ஒன்றும் செய்யமாட்டோம். பெரியவர்களுக்குள் எத்தனையோ விஷயங்கள், கவலைகள் இருக்கும். உன் க்ஷேமத்திற்குதான் பாடுபடுகிறோம்."

"அது சரியம்மா! நாம் என்ன முதல் தாரத்தவனை தேடமுடியாத சக்தியற்றவர்களா என்று கேட்கிறேன்? அவ்வளவுதான்"

"மாலதி நீ விடமாட்டாய் போலிருக்கிறதே. ஹ-ம்...... எப்படியிருந்தாலும் உனக்குத் தெரியத்தானே போகிறது. புகைப்படங்களுக்குள் நீ விரும்பிய அந்த அழகான படத்திலுள்ள என் அக்காவை பெரிய

இடத்தில், அழகான இளைஞனுக்கு மணம் முடித்தார்கள். சில மாதங்கள் கூட செல்லவில்லை. உல்லாசமாகக் காவிரிக்குச் சென்றவர்கள் ஜோடியாக சுழலில் அகப்பட்டு, இவ்வுலகை விட்டுப் பறந்துவிட்டார்கள். அது எங்கள் குடும்பத்திற்கே சோகம். என் அத்தையும் சரி, இந்த குடும்பத்திற்கு உன் அப்பாவின் தங்கையும் சரி மூத்தவளாக வாழ்க்கைப்பட்டு, சந்தோஷப்படும்படியாக ஒன்றும் விளங்கவில்லை.

என் அக்கா, அத்தை இருவரது வாழ்க்கையும் இருவகையில் பிரிந்து பாழாகிய பிறகு, மீதியுள்ள பெண்களை என் அப்பா, ஒரே பிடியில் நின்று இரண்டாமவனுக்கேக் கொடுத்தார். புகைப்படங்களை தான் பார்த்தாயே தெரியவில்லையா? இரண்டு குடும்பத்திலும் இப்படி நேர்ந்திருப்பதால்தான் உனக்கு வயதான, முதல் மணமான வரனைத் தேடுகிறோம். வேறு ஒன்றும் இல்லையம்மா'' என்று கூறி நிறுத்தினாள்.

"அப்படியாம்மா?'' என்று கேட்டுவிட்டு மாலதி தன் அறைக்குள் புகுந்தாள்.

'புகைப்படங்களைப் பார்த்ததுமே எனக்குச் சந்தேகம்? அந்த சந்தேகம் நிவர்த்தியாகி விட்டது. ஆனால்....ஆனால்... என் குறை? நிவர்த்தியாகுமா? அம்மாவிற்கு மூளை ஏன் அப்படி செல்லுகிறது. இது என்ன பைத்தியக்கார எண்ணம்? ஒரு பெண்ணின் வாழ்வு அப்படியாகிவிட்டதாம். அது மற்றவருக்கும் வந்துவிடுமாம். அதனால் இரண்டாம் தாரக்காரனிடம் தள்ளுவதாம். மதியீனம். என்னையும் அதற்கிலக்காக்கவா பார்க்கின்றனர். முடியவே முடியாது. ஒரு நாளும் முடியாது. பச்சோந்தி மனமுள்ள ஆண்கள், இரண்டாம் கல்யாணம் என்ன? இரண்டாயிரம் கல்யாணமும் செய்து கொள்வார்கள். அவர்களிடமா என்னைத் தள்ளப் போகிறாள். ஆண்டவனே! விளங்கி வரவில்லை என்பதையெல்லாம் நான் நம்பவில்லை. ஒருவர் தலைவிதிபோலா மற்றவருடையது இருக்கும். இல்லவேயில்லை. அவரவர் தலைவிதிப்படியல்லவா நடந்தேறுகின்றன. என் கதி என்னவானாலும் சரி, இரண்டாம் தாரத்தவனை மணப்பதில்லை. வயதானவாக இருப்பதில் தோஷமில்லை. ஆனால் மணமாகாதவனாக இருக்கவேண்டும். உடுத்தியிருக்கும்சட்டையைக்கழற்றி எறிந்து வேறு சட்டையை அணிவதுபோல் முதல் மனைவியின் நினைவைக் கழற்றி எறியாதவனாக இருக்கவேண்டும். இது என் சபதம்'—என்று அவள் உள்ளம் ஆத்திரத்தால் வெடித்தது. பழங் காலத்து மக்களின் பைசாச எண்ணத்தை எண்ணி அவள் நெஞ்சம் விம்மியது. பெற்றோரின் தீர்மானம் கேட்டு அவள் மனம் பொருமியது. தன் தீர்மானமே நிறைவேற வேண்டுமென அவள் ஹ்ருதயம் ஆண்டவனை தொழுது வணங்கியது.

அவளது எண்ண உளைச்சலைக் கடந்து இரவு படர்ந்து விட்டது.

காலை!

'ஆ! அவர்கள் வரப்போகி ருர்களே!' என்று மாலதியின் மனம் திக்திக்கென்று அடித்துக் கொள்ளத் தொடங்கியது. ஆயிற்று. அவர்கள் வந்தே விட்டார்கள். 'உம்; ஆகட்டும் ஒரு கை பார்த்துக் கொள்ளுகிறேன். என் எண்ணம் நிறைவேறுகிறதா! அம்மாவினுடையதா?' என்று மனத்துள் கறுவினுள். உள்ளம் உலைகளமாகக் கொதிக்க, ஆனல் வெளிக்கு அழகு பொம்மையாய் நின்ருள். பிள்ளையோடு அதிகமாக யாருமே வரவில்லை. ஒரே ஒரு நபர்தான். பிள்ளையின் முகத்தை ஊடுருவி நோக்கினுள். கண் அவரைச் சுற்றி ஓடிக் கொண்டிருந்ததே தவிர, எண்ணம் எங்கோ சென்று குழம்பிக் கொண்டிருந்தது.

மாலதி உள்ளே வந்து விட்டாள். மறு அறையின் ஜன்னல் ஓரமாகப் போய் நின்று கூடத்தில் கவனித்தாள். 'நம் அம்மா கூறியதுபோல் 37 வயதானவராகத் தோன்றவில்லை. கட்டுத் தளராத வாலிபர் போன்றே தோன்றுகிருரே' என்று யோசித்தாள்.

அதற்குள் தன் உறவினர், கூட வந்திருந்த நபரோடு பேசுவது கேட்டது. "குழந்தைகள் உண்டா? எத்தனை" என்ருர், அதற்கு அவர், "குழந்தையா? இவருக்கா? இவருக்குக் கல்யாணமே ஆகவில்லையே. 37 வயதாகிவிட்டதால் அப்படி கேட்கிறீர்களா? இத்தனை ஆயிரம் ரூபாய் சேர்க்கும் வரையில் மணம் புரிந்து கொள்வதில்லை என்று சபதம்போல் வைராக்கியத்துடன் இருந்தார். அவர் குறிக்கோள் நிறைவேறி விடவே, கல்யாண வேட்டையில் இறங்கியுள்ளார். அவர் பார்க்கும் முதல் பெண்ணும் இவள்தான்" என்ருர்.

இதை செவியுற்ற மாலதி, 'ஆ! என்ன! மணமாகாதவரா? குழந்தையில்லாதவரா? சிறந்த குறிக்கோள் கொண்ட லட்சியவாதியா? ஆண்டவனே! என் எண்ணத்தை எப்படி அறிந்து விரைவில் இப்படிப்பட்ட உத்தமரை இங்கு அனுப்பிவிட்டாய்' என்று மகிழ்ச்சி பொங்க உருகி வேண்டினுள்.

ஆனந்தம் அவள் நெஞ்சை அள்ள "நான் இரண்டாம்தாரக் காரனுக்கு வாழ்க்கைப்படப் போவதில்லை. சிறந்த லட்சியவாதிக்கு துணைவியாகப் போகிறேன். என் கனவு பலித்தது" என்ற எண்ணம் துள்ள அங்கிருந்து நகர்ந்தாள்.

"இவருக்கு பெண்ணைப் பிடித்துவிட்டது. பெண்ணின் சம்மதத்தைக் கேட்டுச் சொல்லுங்கள்" என்ற சொல்லும் தேனருவிபோல் அவள் செவிகளில் பாய்ந்தது.

ஆனல் இவ் வார்த்தையைக் கேட்ட மாலதியின் பெற்ருேர்கள் உள்ளே வந்து குழம்பினர். ஏன்? இரண்டாம்தாரக் காரனுக்கே கொடுப்பது என்பது அவர்கள் தீர்மானமாயிற்றே!

"நம் சம்மதத்தைப் பற்றி பிறகு கடிதமெழுதுவதாகக் கூறிவிடுங்கள். முதல் கல்யாணக் காரர்தானுமே. விவரம் பூராவும் விசாரிக்காதது எவ்வளவு சங்கடத்தில் கொண்டு விட்டுவிட்டது" — இது பெண் குரல்.

"என்ன விசாலம். இப்படி சொல்லுகிறாய்? பிள்ளை பார்ப்பதற்கு எவ்வளவு நன்றாக, நல்லவனாக இருக்கிறான், படிப்பு அந்தஸ்து எல்லாம் கூடி வந்திருக்கையில் முகத்தில் அடித்தாற்போல் எப்படி சொல்லுவது? நா கூசுகிறது."


"அதைப் பார்த்தால்......நம் தீர்மானம் என்ன ஆவது?"

"ஒன்றும் ஆகவேண்டாம் அம்மா! நல்லபடியே எல்லாம் ஆகும். உங்கள் லக்ஷியத்தில் பாதி நிறைவேறிவிட்டதே. இவர் இளைஞரல்லவே! பழைய படி பரம்பரை விஷயங்களை நீங்கள் கடைபிடிப்பது என்று கொண்டிருந்தால்?...அத்தைக்கும், பெரியம்மாவுக்கும் ஏற்பட்ட கதி எனக்கும் ஏற்படும் என்று பயப்படுகிற பக்ஷத்தில் அவர்களை போலவே தானே நானும் இருக்கவேண்டும்? ஆனால் அவர்களைப்போல் வைக்காமல் என்னை ஏன் B. A. படிக்க வைத்தீர்கள்? இவ்வளவு வயது கல்யாணம் செய்யாமல் ஏன் வளர்த்தீர்கள்? இதென்ன மூட நம்பிக்கை?

நெருப்பு என்றால் நா சுட்டு விடாது. என்னை B. A. படிக்க வைத்தீர்கள். நான் திடீரென்று இறந்துவிடுகிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். இனி நம் சந்ததியில் யாரையுமே படிக்கவைக்க மாட்டீர்களா? பழைய விஷயத்தை பரம்பரையாகக் கடைப்பிடிப்பதென்றால் எல்லாவற்றையும் செய்யவேண்டும். மணமாகாதவராயிருந்தால் என்ன? நான் மறு விவாகக்காரனை மனதிலும் நினைக்கமாட்டேன். எனக்கு இவரைப் பிடித்துவிட்டது. எனது பூரண சம்மதத்தை அவர்களிடம் தெரிவியுங்கள்" என்று கூறியவாறு மறு அறையிலிருந்து பாய்ந்து வந்தாள் மாலதி.

பெற்றோர்களின் குழப்பத்தைத் தவிர்க்கும் முறையில் அவள் பேசிய பேச்சை முழு மனதுடன் ஆமோதிப்பது போல் சுவர் கடிகாரம் எட்டு முறை ஒலித்து ஓய்ந்தது. அதன் ஒலி அவள் செவியில் 'நிவர்த்தி...நிவர்த்தி' என்று பாய்ந்து ரீங்காரம் செய்தது.


●



"ஐயயோ! இதென்ன இவ்வளவு சாதம்?... ஐம்பது வருஷம் சாப்பிடலாம் போல் இருக்கிறதே!"

"அப்போ ரொம்ப நல்லதாயிற்று. இன்னும் ஐம்பது வருஷத்தில் ரேஷனோ, பஞ்சமோ எது வந்தாலும் உனக்குக் கவலையேயில்லை."

# கிழக்கு வெளுத்தது




தன் கணவனுக்குத் தெரியாத விஷயங்களை இந்த மனிதன் என்னை உளறிவிடுவானோ என்கிற பயத்தால் கூண்டிலடைபட்டப் புலியைப்போல தவித்தாள். என்ன இருப்பினும் இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் அவளுடைய மதியூகத்தைப் பலதரம் உபயோகித்திருக்கும் பழக்கமுடையவளாதலால் வெகு பெருந்தன்மை, மரியாதை முதலியவைகள் த்வனிக்கத் தன் கணவனைப் பார்த்து, "இப்படி அழைத்துவாருங்கள் சொஜ்ஜி, பஜ்ஜி டிபன் சாப்பிடச் சொல்லலாம் வாருங்கள் ஸார்" என்று தானே கூப்பிட்டாள்.

அப்போதுதான் ஹோட்டலில் ஒருகை சக்கையாகப் பார்த்துவிட்டு வந்த பேர்வழியாயினும் மரியாதைக்கு மரியாதை கொடுக்கும் பெரிய மனிதத் தன்மையில் இறங்கி வந்து ஊஞ்சலில் அமர்ந்தான். அகிலாண்டம்மாள் கொண்டுவைத்த டிபனை பேருக்காகக் கொஞ்சம் ருசிபார்த்தபடி உட்கார்ந்திருக்கையில் அவன் கண் அவ்வீடு பூராவும் ஒரு சுற்று சுற்றி அளவு பார்த்துக்கொண்டிருந்த ரகசியத்தை அப்பாவியாகிய சந்திரசேகரனால் அறிய முடியுமா? அகிலாண்டம்மாள் அரை நொடியில் அறிந்துகொண்டு உள்ளம் வெடித்துவிடும் போன்ற உணர்ச்சியுடன் உள்ளுக்கும் வெளிக்குமாக உலாவுகிறாள்.

சந்திரசேகரனுக்கு 'உண்மையில் இந்தமனிதன் யார்? என்ன...எதற்காக சேஷகிரியைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறான். ஏதோ புதிய வியாபாரம் என்று சொன்னானே அதென்ன?' என்கிற எந்த விஷயமும் தெரியாதாகையால் ஏதோ லோகாபிராமமாய்ப் பேசிக்கொண்டிருந்துவிட்டு

அகிலாண்டம்மாள் வீதிப் பக்கம் இருக்கையில் மறுபடியும் மாடிக்கு அழைத்துச் சென்றுவிட்டார்.

கூடத்துப் பக்கம் வந்த அகிலாண்டத்திற்குத் தூக்கி வாரிப்போட்டது. என்ன செய்வாள் பாவம். முதலில்தான் கட்டியிருந்த ப்ரமாண்டப் புடவையை மாற்றிச் சாதாச் சேலையை அணிந்துகொண்டு ஊஞ்சலில் உட்கார்ந்தாள். அதே சமயம் வாசலில் ஒரு கார் வந்து நின்ற சப்தம் கேட்டுத் திடுக்கிட்டு வீதிப் பக்கம் ஓடினாள். பூமாவைத் தூக்கிக் கொண்டு சென்றவர்கள்தான் திரும்பி வந்துவிட்டார்கள், என்ற எண்ணத்துடன் சென்றவளுக்கு ஏமாற்றத்தின் பயங்கரமும், முகத்தில் அசட்டுக்களை ஜ்வலிக்க மூன்றும் பேஸ்து வைத்ததுபோல சேஷகிரி, பதறப் பதற வந்து "அம்மா! முதலில் இப்படி வா,ஏதோ போதாத காலத்தின் கொடுமைதான் இன்று எனக்குச்சூழ்ந்துவிட்டது. அந்தப் புதிய கூட்டு வ்யாபாரத்தின் முக்யஸ்தன் எமன்போல் வந்துவிட்டான். இன்று பணத்தைக் கட்டாயம் கொடுப்பதாகச் சொல்லியிருந்தவாறு கொடுக்க முடியவில்லை. ஆதலால் அந்தக் கூட்டம் என்னை என்ன பாடு படுத்துமோ தெரியாது. மேலும், பூமாவை 'விமலா நர்ஸிங்க் ஹோமி'ல் கொண்டுவிட்டிருப்பதாகவும் அவளுடைய நிலைமை மிகவும் கவலைக்கிடமாகி இருப்பதாகவும் ஒரு வெடிகுண்டு விஷயம் காதில் பட்டது. ஆகையால் நான் கண்மறைய எங்காவது போய்விடுகிறேன். என் துணிமணிகளைக் கொண்டுகொடு. அந்த மனிதன் வந்தால் நான் ஊரிலில்லை என்று சொல்லியனுப்பிவிடு. பிறகு நான் எப்படி நடக்கவேண்டுமோ அதைப் பார்த்துக் கொள்கிறேன்."..........

மூச்சுவிடாமல் சேஷகிரி சொல்வதைக் கேட்டு அகிலாண்டம்மாளுக்குத் தீயை மிதித்ததுபோலத் துள்ளினாள். ஜாடையினாலும் மெல்லிய குரலாலும் மாடியில் அந்த மனிதனிருக்கிறான் என்பதைச் சொல்லியும் சேஷகிரியின் துடிதுடிப்பில் இதைக் கவனிக்கவே இல்லை. இங்கு தாயும் மகனும் பேசும் குரலைக்கேட்ட கோபு, தட தடவென்று இறங்கி வந்துவிட்டதைக் கண்டதும் சேஷகிரி தம்பித்துவிட்டான்.

அதே சமயம் கூடவே வந்த சந்திரசேகரனும் கூர்ஜம் வைத்ததுபோல் அங்கு நிற்பதைக் கண்டு பின்னும் இடி இடித்ததுபோன்ற அதிர்ச்சி உண்டாகி சேஷகிரியின் நிலைமை வெகு தர்மசங்கடமாகிவிட்டது.

கோபு இங்கு வந்திருப்பான் என்று இவன் கனவு கூட காணுததாலும், தான் தன் தாயிடம் சொல்விய வார்த்தைகளை அவன் கேட்டுவிட்டானே என்கிற கலவரமும் உண்டாகித் துடிக்கும் சமயம் அகிலாண்டம்மாள் சமய சஞ்சீவியாய் பேசத் தொடங்கி, "சேஷகிரி! அருணகிரியாமே உன் சிநேகிதர், அவர் இப்போதுதான் இங்கு வந்துவிட்டுப் போனுர். அவர் உன்னை உடனே தன் வீட்டிற்கு வரச்சொன்னுர். ஏதோ அதிமுக்யமான விஷயம் பேசவேண்டுமாம். இவர் இங்கிருக்கட்டும் நீ போய் விஷயத்தை அறிந்துகொண்டு வா" என்று ஒரு புதிர் போன்ற வார்த்தையைக் கூறிவைத்தாள்.

"காக்காய் ஏறியது பனம்பழம் விழுந்தது" என்ற பழமொழியைப்போல் ஏதோ ஒன்றைச் சொல்லிவைத்துத் தற்சமயமுள்ள நெருக்கடியிலிருந்து சமாளித்துக்கொள்ள வேண்டும் என்ற பதைபதைப்பில் அகிலாண்டம்மாள் கூறியது சேஷகிரிக்கு முற்றிலும் புரியவில்லை என்ருலும் தன்னை வெளியில் அனுப்பிவிடும் சூழ்ச்சிக்காகவே தாயார் சொல்லி இருக்கிருள் என்பதைமட்டும் அறிந்துகொண்டு விட்டான். ஆதலால் "அப்படியா! அவரா இங்கு வந்தார். இதோ நான் போய் பார்க்கிறேன்" என்று கூறியபடியே ஓட்டமாக ஓட எத்தனிக்கையில் எதனுலோ முகம் வெளிறிப்போய் ப்ரேதம் போன்று நிற்கும் கோபு, "சேஷகிரி. நில்லு நில்லு. எந்த அருணகிரி வீட்டிற்கு நீ போகிருய்" என்று பயந்தபடியே கேட்டான்.

இந்த கேள்வியையே காதில் வாங்காத சேஷகிரி ஒரே ஓட்டமாகச் சென்று காரில் ஏறிக்கொண்டு சீக்கிரம் அடுத்த பேட்டைக்கு ஓட்டு என்று கத்தினுன். காரும் கிளம்பிச் சென்றது. அகிலாண்டத்தின் தடைபட்டுத் திணறிய மூச்சும் சற்று நிம்மதியாக வரத்தொடங்கியது. அதே சமயம் ஒருவரிடமும் சொல்லிக்கொள்ளாமல் கோபுவும் போய்விட்டான்.

இந்தப் புரியாத நாடகத்தின் விஷயம் எதுவுமே அறியாத அப்பாவி சந்திரசேகரனுக்கு மட்டும் ஒன்றும் தோன்றவில்லை. பாவம். அகிலாண்டத்தினிடம் அவர் பயந்து நடக்கும் ரகஸியத்தை உலகம் அறியுமா! "இதென்ன நாடகம்" என்று கேட்க ஆவல் தூண்டுகிறது என்ருலும் கேட்க பயம் வேறு பாதிக்கிறது. இருப்பினும் தன்னை மெல்லச் சமாளித்துக்கொண்டு "என்ன அகிலாண்டம்! நீ சரியான பதில் சொல்லமாட்டாய் என்'!து எனக்குத் தெரியும். இருந்தாலும் கேட்கிறேன்.

இதென்னக் கூத்தா....நாடகமா!....சினிமாவா....ஒன்றுமே புரியவில்லையே...சேஷகிரி ஏன் அப்படிப் பதறிக்கொண்டு ஓடுகிறான். அவனுக்கும் உனக்கும் என்ன ரகஸியம் அப்படிப் போராடுகிறது. தவிர இங்கு வந்த மனிதன் யாரு. எல்லாம் எனக்கு விளங்காதப் புதிராக இருக்கிறதே. நல்ல மங்களகரமான நிச்சயதார்த்தம் செய்த வீட்டில் இதென்ன அமர்க்களம் பூமாவுக்கு என்ன நேர்ந்துவிட்டது தயவுசெய்து சற்றுப் புரியும்படி சொல்லு பார்க்கலாம்" என்று தனது பரிதாப த்வனியும் பார்வையும் ஜ்வலிக்கக் கூறினார்.

எத்தகைய பாஷையில், எத்தகைய வசனத்தினால் ஸ்ரீமதி அகிலாண்டம்மாளின் ரணவீரபத்ர சண்டிகையைப் போன்ற நிலையில் இருக்கும் ஸ்வரூபத்தை எவ்வாறு வர்ணிப்பது என்றே தெரியாதவிதமாய் நிற்கும் பத்ரகாளியின் வாயிலிருந்து முதல் முதல் புறப்பட்டச் சொற்கள், "என் தலை எழுத்து. கிளியை வளர்த்துப் பூனையின் கையில் கொடுத்ததுபோல் உங்கள் காலில் கட்டி என்னை நாசமாக்கிவிட்டது. நான் பண்ண பாவம். என்னைப் பாழுங் கிணற்றில் தள்ளுவதற்குப் பதில் இந்த எழவெடுத்த வீட்டில் தள்ளி வதைப்படச் செய்துவிட்டார்கள். என் வயிற்றெறிச்சலைக் கிளப்பவேண்டாம். எங்காவது நீங்களும் தொலைந்து போங்கள்" என்று வெகு இனிமையான வார்த்தைகள் புறப்பட அதைத் தொடர்ந்து கண்ணீர் வெடித்து வெளிகிளம்ப, அதையொட்டி இரு கைகளும் வயிற்றில் அடித்துக்கொள்ள அகிலாண்டம்மாள் அடுக்களைக்குள் மறைந்தே போய்விட்டாள்.

அசட்டு மனிதனாகிய சந்திரசேகரன் பின்னும் கலக்கமுற்று யோசனைக் கடலில் மூழ்கினார். அவரால் அங்கு நிற்கவே முடியாத வேதனை உண்டாகிவிட்டதால் தான் எப்படி இந்த ரகஸியங்களை அறிவது...என்ற நினைப்பைவிட பூமாவின் கதி என்னவாயிற்று இதை யாரைக் கேட்டறியலாம் என்ற குழப்பமே தலைதூக்கி நின்றது.

'ஏன்! நாம் அகல்யாவின் வீட்டிற்கே சென்று விசாரித்தால் என்ன?' என்று தோன்றியதால் மேல்துண்டை உதறிப் போட்டுக்கொண்டு அகல்யாவின் வீட்டைநோக்கி நடந்தார்.

★

## திருடனுக்கு தேள் கொட்டினால்....?

அகல்யாவுக்கும் அவள் தாயாருக்கும் இதுவரையில் பராமரியாகக் கேள்விப்பட்டிருந்த அகிலாண்டம்மாளின் ஆர்பாட்டம் இன்று நன்றாக வெட்டவெளியாகிவிட்டதை ப்ரத்யக்ஷமாகக் கண்டுவிட்ட போதிலும் நெஞ்சம் கலங்கவில்லை. பூமாவின் பரிதாபகரமான வாழ்க்கையைக் கண்டுதான் தாயும் மகளும் கலங்கிப் போனார்கள்.

நிச்சயதார்த்தம் முடிந்து வீட்டிற்குச் சென்றதும் ஸேதுராமன் அவசரமாக மீட்டிங்கிற்குப் போய்விட்டார். எதைப்பற்றியும் பேச அவருக்கு அவகாசமே இல்லை. ஸீதம்மாள் மட்டும் தனது ஸ்த்ரீ ஜாதியின் சலனத்தை விட்டுக்கொடுக்காமல் உரிமை பாராட்டும் முறையில் மகளை நோக்கி "அகல்யா!" என்று கூப்பிட்டு ஏதோ சொல்ல வாயெடுத்தாள்.

தாயின் மனத்தில் உள்ள உணர்ச்சியை அறிந்த அகல்யா மிக்க சாவதானமாய்த் தாயைப் பார்த்து, "அம்மா! என்ன செய்வதம்மா இந்த சம்மந்தத்தின் அழகை" என்றுதானே கேட்க வாயெடுத்தாய். நீ சகலத்திற்கும் தெய்வத்தை நம்புகிறவளாயிற்றே! இதற்கும் தெய்வ நம்பிக்கை நமக்குத் துணையில்லையாம்மா! ஏன் கவலைப்படுகிறாய். ஒரு குறைவும் வராது. மிஸ்டர் சந்திரசேகரன் மிகமிக நல்லவர்.. தவிர, பாஸ்கரனை அப்பாவுக்கு மிகவும் பிடித்திருக்கிறது....ஏன்—எனக்கும் உனக்கும் கூடத்தான் அபாரமாகப் பிடித்துவிட்டது. இனி இதைப்பற்றிய எந்த மாறுதலும் செய்ய வேண்டாம்மா.... தயவுசெய்து நீ தைரியமாயிரு" என்று தானே முற்றுப் புள்ளி வைத்துக் கூறியதைக் கேட்டு ஸீதாம்மாள் வாய் மவுனமாகியது.

அகல்யா வேறு உடை அலங்காரம் செய்துகொண்டு "அம்மா! பெல்டைக் கொடு" என்று கேட்டாள். ஸீதம்மாளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. அடாடா! நான் அதை எடுத்துக்கொண்டு வரவில்லையே! அங்கேயே நின்றுவிட்டதம்மா! உடனே போய்க் கொண்டுவரலாம் கிளம்பு" என்றாள்.

மறுபடியும் தாங்கள் அங்கு சென்றால் என்ன ரஸா பாஸ நிலைமையைப் பார்க்க நேருமோ! என்கிற உணர்ச்சி ஸீதம்மாளின் மனத்தை உறுத்தியதால் சற்று தயங்கினாள்... அகல்யா தன் பெண்ணாக இருப்பினும் மரியாதைக் குறைவாய்ப் பேசவும், அநாகரீகமாய் நடந்துகொள்ளவும், என்றுமே ஸீதம்மாள் துணிந்ததில்லை. தாயும் மகளும் அன்யோன்யமான அன்புடன் இருப்பினும் வெகு வெகு கண்ணியமான முறையிலேயே நடப்பார்கள். ஆகையால் தனது அபிப்ராயத்தை வெளிப்படையாகச் சொல்ல ஸீதம்மாள் தயங்கினாள்.

தாயின் குறிப்பறிந்த அகல்யா சிரித்துக்கொண்டே, "அம்மா! நாம் ஸகல விஷயங்களையும் நன்றாக அறிந்த பிறகல்லவா இதற்குச் சம்மதித்திருக்கிறோம். இனி அந்த வீட்டில் நடக்கும் எத்தகைய விஷயமும் நமக்கு அதிர்ச்சி கொடுக்காதென்றே நினைக்கிறேன். ஏனென்றால் உங்களுடைய அதிர்ஷ்டவசத்தினால் கிடைத்துள்ள மருமகப்பிள்ளையின் அருங்குணமொன்றே போதுமல்லவா....? உம். புறப்படு. 50 சவரன் உள்ள பெல்டை விட்டுவிட மனம் வருமா?" என்று கூறி தங்களுடைய மற்றொரு காரை தானே டிரைவ் செய்ய ஆயத்தமாய்விட்டாள்.

ஸீதாம்மாள் மறுபேச்சின்றி காரில் ஏறினாள். நாம் முன்பு தெரிவித்தபடி இருவரும் அங்கு வந்து பூமாவின் அலங்கோலத்தைப் பார்த்து கதிகலங்கிப்போய் வெகு தைரியமாய்த் தூக்கிக்கொண்டு சென்ற அகல்யாவுக்கு உண்மையில் பூமாவின் விஷயத்தில் எதனாலே ஆழமான அன்புடன் அபாரமான பரிவும் கனிவும் உண்டாகி மனத்தைக் கலக்கியது.

காரைத் தான் ஓட்டியவாறு, "மிஸ்டர்! ஆஸ்பத்ரிக்குத்தான் போகப்போகிறேன். உங்கள் வீட்டில் யாரும் ஆக்ஷேபனை செய்யமாட்டார்களே!" என்று தானே பேச்சை ஆரம்பித்தாள். தன்னுடைய வாழ்வுக்கு இன்பத்துணைவியாகப் போகும் மாதரசி கார் விடுவதையும் இத்தகைய புத்திசாலித்தனமாய்—தைரியமாய்—உலகமே பயந்து ஒடுங்கும் தன் பேயான தாயிடம் சற்றும் கயமயவென்று நடுங்காமல் அவளே ப்ரமிக்கும் வண்ணம் பூமாவைத் தூக்கிக்கொண்டு வந்திருப்பதும் பாஸ்கரனுக்குள்ள எல்லையற்ற மகிழ்ச்சியைச் சொல்ல முடியவில்லை. தானாகப் பேசத்தொடங்கி அகல்யா தன் யாழிசை த்வனியில் மரியாதையுடன் கேட்டதும் பாஸ்கரனின் உடலே பூரித்துப்

புல்லரித்துச் சிலவினாடிகள் பேசத்தெரியாமல் மவுன மாகவே விழித்தான்.

பிறகு சற்று சமாளித்துக்கொண்டு, "ஆஸ்பத்ரிக்கு வேண்டாமென்று நினைக்கிறேன். ஏனென்றால் அங்கு கூட இருப்பதற்கும் அடிக்கடி சென்று பார்ப்பதற்கும் விட மாட்டார்கள். "விமலா நர்ஸிங் ஹோ"முக்குக் கொண்டு போனால் நாம் அருகிலேயே இருந்து கவனிக்கலாம். என் வீட்டைப்பற்றி நாம் கவலையே படவேண்டாம். மன்னியின் உடம்பு சரியாகிவிட்டால் போதும்." என்று அன்புகனியக் கூறினான்.

அடுத்த நிமிடமே கார் விமலா நர்ஸிங் ஹோம் வாச லில் நின்றது. பூமாவைத் தானே உள்ளே தூக்கிச் சென்று கிடத்திவிட்டுத் தனக்குத் தெரிந்த டாக்டர் சுகுணாவிடம் சென்று விஷயங்களை விளக்க அழைத்து வந்தாள்.

டாக்டர் சுகுணா இவர்களுக்கு மிகவும் தெரிந்தவராத லால் இவர்களிடம் மிக்க அன்புடன் பேசியபடியே பூமா யாரென்று விசாரித்தாள்.

"டாக்டர்! முதலில் பேஷண்டைப் பார்த்து பயம் ஒன்றுமில்லையா என்று சொல்லுங்கள். பிறகு இவர் யார் என்று சொல்கிறேன்" என்று பதறியவாறு அகல்யா கூறினாள்.

சுகு: அகல்யா நீ சொல்கிறபடி தானாக மயக்கம் போட்டு விழுந்திருப்பதாகவோ! ரத்தக்குழாய் வெடித்து இப்படி மூக்கில் ரத்தம் வருகிறது என்றோ, நான் நம்ப மாட்டேன். இதோ! பேஷண்டின் கன்னத்தையும்...... முதுகையும் பாரு! கைவிரல்கள் எப்படிப் படிந்திருக் கிறது. இதை நீ கவனிக்கவில்லையா?" என்று டாக்டர் கேட்கும்போது பாஸ்கரனின் முகம் எப்படியோ ஆகிவிட் டது. வாஸ்தவத்தில் பாஸ்கரன்கூட விரல் பதிந்திருப் பதைப் பார்க்கவில்லையாதலால் அந்த அடையாளத்தைக் கண்டதும் இதயம் வெடித்துவிடும்போலாகிவிட்டது.

இதற்குள் டாக்டர் மேலும் பேசத்தொடங்கி, "அகல்யா, உடனே நீ கொண்டுவந்திருப்பதால் ஏதோ என்னால் முடிந்ததைப் பார்க்கிறேன். ப்ராண பயமில்லை என்றாலும் வேண்டுமென்று அடித்திருப்பதால் அபாயகரமான விஷயம் என்றே அவர்களிடம் தெரிவிக்கவேண்டும். இந்தம்மாள்... இவர்....யாரு?" என்றாள்.

சிரித்துக்கொண்டே, "டாக்டர்! மன்னிக்கவேண்டும் முன்பே தெரிவிக்க முடியவில்லை. அடுத்த வெள்ளிக் கிழமை இவருடைய வாழ்க்கைத் துணைவியாக அகல்யா ஆகப்போகிறுள். இவர் ஐ. ஏ. எஸ். பாஸ்செய்துவிட்டுப் பத்தான்கோட்டில் வேலையிலிருக்கிறுர். மிஸ்டர் பாஸ் கரன் என்பது இவர் பெயர். இவ்வூர் பள்ளிக்கூடத்து உபாத்தியாயர் ஸ்ரீமான் சந்திரசேகரின் புதல்வர் இவர்." என்று சிதம்மாள் கூறியதும் டாக்டர் வெகு பூரிப்புடன் அகல்யாவைத் தட்டிக்கொடுத்து, "வெகு சந்தோஷம் அகல்யா! என்னுடைய ஆசிகளைக் கொடுக்கிறேன். மிஸ்டர் பாஸ்கரன்! நீங்கள் எத்தனையோ புண்ணியம் செய்திருப்ப தனுல்தான் அகல்யாவை நீங்கள் அடையப் போகிறீர்கள். இது என்னுடைய பரிபூரண வாசகமாகும். தம்பதிகள் தேனும் பாலும் போல் பல்லாண்டு வாழவேண்டும்... இந்தம்மாள்..." என்று மீண்டும் பூமாவைக் காட்டிக் கேட்டாள்.

பாஸ்கரன்: டாக்டர்! என்னுடைய அண்ணன் மனைவி இவர். உண்மையில் என்னுடைய அண்ணனின் முரட்டுத் தனத்தினுல்தான் இந்தச் சம்பவம் உண்டாகி இருப்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். தாங்கள் தயவுசெய்து இதை வெளியிடாமல் உயிர் பிச்சைத் தரவேண்டும். தாங்கள் சொல்லியபடி எத்தனையோ ஜென்மத்தில் செய்த பாக்கி யமே என்னுடைய அகல்யாவை எனக்குக் கடவுள் கொடுத் தார் என்பதை நான் மறக்கமாட்டேன் டாக்டர். முதலில் பேஷண்டைக் கவனித்துக் காப்பாற்றித் தரவேண்டும்" என்று கூறும்போதுபாஸ்கரனின் குரல் தழதழத்து கண் கலங்கியது.

உடனே டாக்டர் தக்க சிகிச்சைகளை பூமாவுக்குச் செய்து பூமா சற்றுக் கண் திறக்கும்வரையில் கூடவே இருந்தாள். சிறிது நேரங்கழித்து பூமா மெல்லக் கண் களைத் திறந்ததும் அவளுடைய இதயத்தின் தாபந்திர அகல்யாவே முன்னிலையில் காக்ஷியளித்ததைக் கண்டு பதறியவாறு, "ஹா...! அகல்யா! அகல்யா ...நீ இன்னும் வீட்டிற்குப் போகவில்லையா....? ஐயோ! அம்மா எங்கே? பாஸ்கர்....நீங்களுமா ...?" என்று குளறியவாறு கேட்டாள்.

பாஸ்கரர். மன்னி !....மன்னி! இப்பொழுது தெளிந்திருக் கிறதா அம்மாவைப் பற்றியும் அண்ணனைப் பற்றியும் நீங்கள் இப்போது நினைக்கவே வேண்டாம். ஏன் கண்ணீர் வருகிறது. நீங்கள் இப்போது வீட்டில் இல்லை.ஆஸ்பத்ரியில் இருக்கிறீர்கள்" என்பதற்குள், "என்ன சொன்னீர்கள்!

நான் ஆஸ்பத்ரியிலிருக்கிறேனு? அவர்.......அவர் எங்கே பாஸ்கர்...அவர் எங்கே?'' என்று தன்னுடைய நோயையும் மறந்து பாரதநாட்டுப் பெண்மணிகளுக்கே தனித்த புகழுடன் விளங்கும் பொறுமை....அன்பு...கடமை...முதலிய உணர்ச்சிகள் ஜ்வலிக்கக் கேட்டபடி எழுந்திருக்கப் போனுள்.

அகல்யா அவளைத் தடுத்துப் படுக்கவைத்தபடியே "அம்மணீ! அவர் சவுக்கியமாயிருக்கிருர். பயப்படவேண்டாம். இதோ டாக்டர் சுகுணதேவியைப் பாருங்கள்" என்று கூறியபடியே பூமாவை அணைத்துக்கொண்டாள். பூமாவின் வெள்ளை உள்ளத்தின் மாசுமருவற்ற தன்மை அகல்யாவின் இதயத்தைத் தொட்டுவிட்டது.

"இதோபாரம்மா! உனக்கு எங்கெல்லாம் வலிக்கிறது. சொல்லு...மூக்கில்....'' என்று டாக்டர் கேட்டு முடிப்பதற்குள், "எனக்கு எங்குமே வலி இல்லை டாக்டர். நான் நான்...வீட்டிற்குப் போய்விட வேண்டும். தயவுசெய்து என்னை அனுப்பிவிடுங்கள். அகல்யா!..நிற்பது?...மாமியா... வாருங்கள் வீட்டுக்குப் போகலாம். எனக்கு ஒன்றும் பயமில்லை. இம்மாதிரி நான் மயக்கம் போட்டு விழுவது சகஜம். என்னைத் தயவுசெய்துஅனுப்பி விடுங்கள்டாக்டர்." என்று கெஞ்சிப் பரிதாபமாகப் பார்த்துக் கேட்டாள்.

"அம்மா! வீணகப் பிடிவாதம் செய்யாதே. உன் நிலைமை உனக்குத் தெரியவில்லை. நீ இன்னும் இரண்டு மூன்று நாட்களுக்கு இடத்தைவிட்டு அசையவே கூடாது. இது டாக்டராகிய நான் போடும் கட்டாய உத்திரவு. இதை மீறினல் உன்னை உன் கணவனே இத்தகைய விபத்திற்கு ஆளாக்கிவிட்டான் என்பதை சர்க்காருக்கு அறிவித்துத் தண்டனை வாங்கி வைப்பேன். ஜாக்கிரதை! பேசாமலிரும்மா'' என்று டாக்டர், பாஸ்கரன் அகல்யா இருவரும் சொல்லியுள்ளபடி கூறினள்.

பூமா அலறியவாறு, "ஐயயோ! அனியாயமாய் அவர் மீது பழி சுமத்தவேண்டாம். அவர் என்னைத் தொடவே இல்லை. அவரை நீங்கள் பழித்துப் பேசி ஏதாவது செய்து விடப் போகிறீர்கள். உங்கள் கால்களைப் பிடித்துக் கொண்டு வேண்டுகிறேன். என்னைக் காப்பாற்றுங்கள். அவரை ஒன்றும் செய்துவிடாதீர்கள். இரண்டு நாள் என்ன? ஒரு மாதம் வேண்டுமானுலும் நான் இங்கிருக்கிறேன். நீங்கள் தயைகாட்ட வேண்டும், அகல்யாவாகிய ஆதித்தனல் என் வாழ்வில் இருள் நீங்கி, துன்ப பயங்கரங்கள் அகன்று "கிழக்கு வெளுத்து" இன்பக்கிரணங்கள்

சூழுமா! என்று நான் எதிர்பார்த்து ஏங்குகிறேன் டாக்டர். அந்த ஆசையை நிராசையாக்கிவிடக் கூடாது. பாவிஜென்மமெடுத்த என்னால் என் பாஸ்கரன் அகல்யா இருவரின் இன்ப வாழ்வும் துன்ப இருளில் எங்கே அகப்பட்டுவிடுமோ பகவானே உன் கருணைக் கதிரவன் தோன்றி மகிழ்ச்சி மயமான இன்பத்தை அளிக்கவேண்டும் என்று இராப் பகல் ப்ரார்த்தனை செய்கிறேன். நான் ஏதோ ஆவேசம் வந்தவளைப் போல் பிதற்றுகிறேன் என்று நினைக்கக் கூடாது...."என்று படபடத்த உணர்ச்சி விஞ்சிவிட்ட நிலையில் பேசியதால் உடனே அதிர்ச்சியினால் சற்று மயக்கமாகிவிட்டாள்.

"உம்...ஐயோ! நம்முடைய பாரத நாட்டின் மிகச் சிறந்த பண்பாட்டையும், பதிபக்தியின் உன்னத லக்ஷியத்தையும் பார்க்கும்போது நம்மைப்போன்ற பாக்யசாலிகள் உண்டா! எத்தகைய ஒப்புயர்வற்ற நாட்டில் பிறந்திருக்கிறோம் என்ற பெருமிதம் இதயத்தில் கொந்தளிக்கிறது ஸார்! நான் அன்னிய நாட்டிற்குச் சென்றிருந்தபோது அந்நாட்டினரில் பெரும்பாலோர் நம் நாட்டுக் கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் முக்யமாகப் பெண்களின் கற்புத் திறனையும் போற்றிப் பேசியதோடு தங்கள் நாட்டில் அப்படியொரு உத்தமநிலை இல்லையே! என்றும் ஏங்கியதை நான் கண்கூடாகக் கண்டிருக்கிறேன். ஆனால் இத்தகைய உத்தமியை மனம் வருந்தத் தவிக்கச் செய்யும் அக்கிரமத்தைப் பார்க்கும்போது நாமே நம் நாட்டின் பெருமையை ஒரு கடுகளவு மறந்து "ஏன் இத்தகைய ராக்ஷஸனிடம்.... ராக்ஷஸியிடம் வாழவேண்டும்?" என்று நினைக்கும்படியும் ஆகிவிடுகிறது...சரி... இன்னும் அதிகம் பேசினால் அவளுக்குத் தாங்கமுடியாது. நாம் வெளியே செல்வோம்...நர்ஸ்! பேஷண்டைப் பார்த்துக்கொள். என்று கூறிவிட்டு சுகுணதேவி அடுத்த ஹாலுக்கு இவர்களை யனுப்பிவிட்டுத் தன் வேலையைக் கவனிக்கச் சென்றுவிட்டாள்.

தனியாக விடப்பட்ட மூவருக்கும் என்ன பேசுவது என்ன செய்வது? வீட்டிற்குப் போய் அவர்களிடம் எவ்வாறு சொல்வது? என்றே தோன்றாமல் திகைத்து மூன்று பதுமைகள் போலானார்கள்.

அகல்யா:—மிஸ்டர்! நேரமாகிறது. நான் இங்கேயே இருக்கிறேன். அம்மாவும் நீங்களும் வீட்டிற்குப் போய் வாருங்கள். அப்பாகூட வந்துவிடும் நேரமாகிவிட்டது. 8 மணிக்கு அப்பா உங்கள் வீட்டிற்கு வருவதாகச்

சொல்லி இருக்கிறபடி நேரே அவர் அங்கு போய் விட்டால்''...

என்று முடிக்காமல் சற்று இழுத்தார்போல் நிறுத்தி விட்டு பாஸ்கரனின் முகத்தைப் பார்த்தாள். தர்ம சங்கடம் என்று சொல்லக்கூடிய நிலையை பாஸ்கரன் நன்ருக அனுபவித்துத் தவிக்கிருன் பாவம். தன்னுடன் பிறந்த அண்ணனைப் பற்றியும், தன் தாயாரின் ராக்ஷஸ குணத்தையும் நன்கறிந்துகொண்டு விட்டதால் இந்த அவமானத்தை எப்படிச் சகிப்பது என்கிற கவலேயே உண்டாகி முகம் சுருங்கிப் பொலிவிழந்துக் கவிழ்ந்து விட்டது.

பாஸ்கரனின் உள்ளத் துடிப்பை ஒரு நொடியிலறிந்த அகல்யா என்னதான் உயர்ந்த படிப்புப் படித்து நாகரீக மாக வாழ்க்கை நடத்திய போதிலும் தன் மனத்தைவிட்டு எப்படித்தான் லஜ்ஜையின்றி பேசமுடியும். "அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு'' என்கிற நால்வகைக் குணங்களும் பாரத நாட்டின் அழியாத சிறப்புப்பெற்றச் செல்வங்களல்லவா! எங்கோ ஒருசில பெண்கள் இந்த அபூர்வ குணங்களுக் குப் புறம்பாக நடப்பினும் மற்றவர்களை இந்தப் பண்பாட் டின் பசை விட்டகலவில்லை என்பது நாளையும் ப்ரத்யக்ஷ மல்லவா! அந்த விதிக்கு அகல்யாமட்டும் விலக்காகியவளா!

"இரண்டாட்டில் ஊட்டிய குட்டிபோல்'' ஸீதம்மாள் இருவருடைய நிலையையும் கண்டும் காணுததுபோன்று சற்று விலகியே நின்ருள். உடனே பாஸ்கரனே சற்று சமாளித்துக்கொண்டு "அகல்யா! நான் வீட்டிற்குப் போய் சற்றுநேரத்தில் வருகிறேன்'' என்று சொல்லியபடி வாச லுக்கு வந்தான். சற்று தூரத்தில் தன் அண்ணன் மோட்டாரில் வந்து இறங்குவதைப் பார்த்ததும் எங்கே உள்ளே வந்துவிடுவானே! என்கிற பயமும் வெறுப்பும் உண்டாகியதால் சடக்கென்று ஒரு யோசனைசெய்தான்.

அங்கு வீதியில் காவலிருக்கும் ஆளைப்பார்த்து சேஷ கிரியைக் காட்டி "அப்பா! அந்த மனிதர் இங்கு வந்தால், அம்மாளுக்கு உடம்பு மிகவும் அபாயகரமாக இருக்கிறது. பெரிய டாக்டர்கள் பார்க்கிருர்கள். யாரையும் உள்ளே விடக் கூடாதென்று சொல்லிவிட்டார்கள். உள்ளே போகக்கூடாது'' என்று கூறிவிடு என்று சொல்லிவிட்டு, தான் மறைவிடமாக நின்றிருந்தான்.

சேஷகிரியோ நான்கடி நடக்கிருன். மறுபடியும் பின் னுக்குப் போகிருன். உள்ளே வரவும் தோன்றுகிறது.

பயமாயுமிருக்கிறது. இங்நிலையில் அவன் தவிப்பதும், முகத்தில் பயங்கரமான ஒரு ரேகை படிந்திருப்பதும நன்ருகத் தெரிந்தது கண்ட பாஸ்கரன் "படுபாவி, மூளை கெட்ட காரியத்தைச் செய்துவிட்டு நடிக்கிருன்" என்று தனக்குள் நினைத்துச் சபித்தான்.

அதே சமயம் சேஷகிரி மெல்லத் திருடன்போல வேலையாளிடம் வந்து..."ஏம்பா! இங்கு சற்றுமுன்பு ஒரு பேஷண்டு வந்ததே. அது........"என்று முடிப்பதற்குள் வேலைக்காரன், பாஸ்கரன் சொல்லியபடி மடமடவென்று ஒப்பித்து விட்டதோடு..."ஏஞ்சாமி. அந்தம்மா உங்களுக்கு என்ன வேணுங்க" என்ருன்.

முகத்தில் கொலைபாதகக்களைத் தாண்டவமாட சேஷ கிரி அசட்டுப் பிசட்டென்று பார்த்தபடியே..."ஹி...ஹி.. அந்தம்மா எங்களுக்குத் தெரிந்தவங்க. உடம்பு சரியில்லை என்று கேள்விப்பட்டு பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன். சரி...நான் பிறகு வருகிறேன்"என்று கூறிய படியே தடதடவென்று போய்விட்டான்.

இதைக்கண்டு இதயம் வெடித்துவிடும் போன்ற வேதனைஉண்டாகிய பாஸ்கரனுக்கு வீட்டிற்குப் போவதா! வேண்டாமா என்கிற குழப்பமுண்டாகியது. தன் ஜென் மத்தில் இத்தகைய மனத் துடிப்பும் திண்டாட்டமும் அனு பவித்ததில்லை யாகையால் பாஸ்கரனுடைய நிலைமை பரிதாபமாகிவிட்டது. எதற்கும் வீட்டிற்குப் போய்வர எண்ணி வாசலுக்கு வந்தான்.

அதே சமயம் அகல்யாவின் தகப்பனர் மீட்டிங்கிலி ருந்து திரும்பி வரும்போது விமலா நர்ஸிங்ஹோம் வாசலில் பாஸ்கரன் நிற்பதைக்கண்டு காரை நிறுத்தி மிஸ்டர் பாஸ் கரன்! ஏன் இங்கு நிற்கிறீர்கள்....எங்கள் காரும் இங்கிருக் கிறதே.. என்ன விஷயம், என்று பயந்தவாறு கேட்டார்.

நடந்த ஸகல விஷயங்களையும் மிக்க வருத்தத்துடன் கூறுவதைக் கேட்ட ஸேதுராமன், பாஸ்கரனையும் கூடவே அழைத்துக்கொண்டு பூமா படுத்திருக்கும் இடத்திற்குச் சென்று பார்த்தார். மிகப் பரிதாபகரமான நிலைமையில் உள்ள பூமாவைப் பார்த்ததும் அவருடைய மனது இளகிக் கண்ணீர் முட்டிவிட்டதை மெல்லத் துடைத்துக்கொண்டு "உம் பாவம், பரதேசி திக்கில்லாத நிலையில் உள்ளவர் களின் கதிக்கு உலகம் இறங்குவதில்லை. சமூகத்தில் நடக் கும் கொடுமைக்கு வேலியமைத்துச் சாவுமணி அடிப்ப தில்லை. இதென்ன அக்ரம உலகம், இதென்ன அனியாயம்

என்று தனக்குள் நினைத்தபடி பூமாவை நோக்கி.."அம்மா! உடம்பு எப்படி இருக்கிறது, பயப்படாதே, உனது பிதாவைப்போல் என்னை நினைத்துக்கொள்ளம்மா!"என்று நாத் தழதழக்கக் கேட்டவாறு "அகல்யா, உன்னுடைய புத்தி சாலித்தனத்திற்கு நான் மெச்சுகிறேன். இந்தம்மாளை விட்டு நீ வரவே வராதே. உனக்கு என்ன வேண்டுமோ அவைகளை டெலிபோன் மூலம் நீ பெற்றுக்கொண்டு இந்தம்மாள் குணமாகியதும் நம் வீட்டிற்கே அழைத்துக் கொண்டு வந்துவிட வேண்டும்....மிஸ்டர் பாஸ்கர்! நான் சொல்வது சரிதானே" என்றார்.

"பதிலே பேசத்தெரியாமல்பலவிதஉணர்ச்சிகளும்துக்கமும் நெஞ்சை அழுத்தும் வேதனையிலும் கடைந்தெடுத்த அமுதம்போன்ற மனைவியை பகவான் தனக்குக்கொடுத்திருப்பதை எண்ணி மனதார பகவானை வணங்கி மவுனமே வடிவாக நின்றான்.

"அப்பா! நீங்கள் சொல்வதற்கு முன்னாலே நான் இந்தம்மாளை நம்வீட்டிற்கு அழைத்துச்செல்ல தீர்மானித்துவிட்டேன். அவரும் அதற்குச் சம்மதிப்பார்: என்பது எனது நம்பிக்கை." என்று கூறியபடியே பாஸ்கரனை ஓரைக்கண்ணால் பார்த்தாள்.

பூமாவுக்கோ தனது தர்மசங்கடமான நிலைமையின் உணர்ச்சியே தலைதூக்கி பாணம்போல் துளைக்கின்றது. இத்தகைய தங்கக் கம்பிபோன்ற மனிதர்களிடம் தன்மாமியாரும், கணவரும் எப்படியோ நடந்துக்கொண்டு விட்டார்களே! இதனால் இந்த மனமொத்த, அன்புமயமான தம்பதிகளின் அன்யோன்ய வாழ்வுக்குப் பங்கம் வராமலிருக்க வேண்டுமே, என்ற பயம் நடுங்குகிறது.

முன்பின்னறியாத அகல்யா தன்னிடம் அன்பைப் பொழிந்து இதயத்தைத் தொட்டுவிட்ட பெருந்தன்மையை எண்ணி எண்ணி பூரித்து அகல்யாவின் கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருப்பதை விடவே இல்லை.

ஸேதுராமன் பெரிய டாக்டரிடம் பூமாவைப் பற்றிய சகல விவரங்களையும் விசாரித்துக்கொண்டார் எனினும் ப்ராண பயமில்லை என்பதை வெளியிட வேண்டாம், என்று எச்சரித்துவிட்டு அகல்யாவைமட்டும் அங்கு விட்டுவிட்டு பாஸ்கரனையும் தன் மனைவியையும் அழைத்துக்கொண்டு நேரே தன் வீட்டையடைந்தார்.

எத்தனைதான் மனத்தை தைரியபடுத்திக் கொண்டு நாகரீகத்தின் முதிர்ச்சியில் நடந்தபோதிலும், இத்தகைய

ராக்ஷஸ குணம் படைத்த குடும்பத்தில் ஸம்மந்தம் செய்தால் அதனால் என்ன நேரிடுமோ! என்கிற ஒரு கவலை அவரையறியாமல் இதயத்தை வாட்டியது. "அகத்தினழகு முகத்தில் தெரியும்" என்கிற பழமொழிபடிக்கு ஸேதுராமனின் முகத்தில் கவலையின் ரேகைப் படர்ந்திருப்பதை வெகு சூக்ஷ்மமாகப் புரிந்துகொண்ட பாஸ்கரனின் கலக்கம் பின்னும் அதிகரித்தது. சிறிதுநேரம் எல்லோரிடமும் மவுனம் குடிகொண்டது.

இதற்குள் ஸீதம்மாள் இருவருக்கும் குளிர்ந்த பானத்தைக் கொடுத்தாள். எதனாலோ பாஸ்கரனுக்கு அதைச் சாப்பிடவும் பிடிக்கவில்லை. ஸேதுராமனின் மனத்தில் ஏதோஒரு கலக்கம் புகுந்துகொண்டுக் குடைவதை நன்றாக அறிந்துவிட்டதனால் அவனுடைய மனமும் மேகத்திரையில் மறைந்தே கிடந்தது.

சில வினாடிகள் தனக்குள் எண்ணாததும் எண்ணித் தவித்தான். பிறகு தன்னைத்தான் சமாளித்துக்கொண்டு ஸேதுராமனை நோக்கி, "ஸார், என் மனது சரியான நிலையிலேயே இல்லை. ஏதோ வேதனைக்கடலில் விம்முகிறது. எதிர்பாராதபடி நடந்துவிட்டச் சம்பவத்திற்காக நான் மன்னிப்புக் கோருகிறேன். என் வீட்டினரின் அசுர குணத்தையும், செயல்களையும் தாங்கள் நேரில் அறிந்த பிறகு உங்களுடைய ஏகபோகபாக்கியத்தின் சிகரமான செல்வியைக் கொடுக்கத் தயங்குவது சகஜந்தான். அதை நான் பரிபூர்ணமாய் உணர்ந்துவிட்டேன். என் மன்னிக்கு உயிர் பயமில்லை என்று டாக்டர் சொல்லிவிட்டதால் நான் இன்றிரவே ஊருக்குப் போய்வருகிறேன்."

என்று நாத்தழதழக்க பாஸ்கரன் கூறுவதைக் கேட்டு திடுக்கிட்ட ஸேதுராமனின் தேகம் நடுங்கிவிட்டது. இத்தகைய அருமையான மருமகப்பிள்ளையை நாம் கைவிடுவதா? சேச்சே! அகல்யாவின் உள்ளத்தை நன்றாக அறிந்த பிறகும் என்னுடைய அறியாமையினால் எனமனம் கலங்கிவிட்டதை நொடியிலறிந்து அவன் மனமும் நோகும்படியாக நடந்துவிட்டோமே! என்று கலங்கியவாறு பாஸ்கரனின் இரு கைகளையும் பிடித்துக்கொண்டு, "ஸார்! மன்னிக்க வேண்டும். உங்கள் மனத்தை நான் கலக்கிவிட்டதாகத் தெரிகிறது. அதற்காக வருந்துகிறேன். ஆனால், ஒன்று நீங்கள் கோபிக்கக்கூடாது. உங்கள் தாயாரைப் பற்றி இவ்வூரில் பலர்கூற நாங்கள் கேட்டிருக்கிறோம். இருப்பினும் இன்று நடந்த கொடுமையைக் கண்ணாரக்கண்டபிறகு என் மனது என்னைமீறி வேதனைக்குள்ளாகிவிட்டது. திக்கற்ற

ஒரு பரதேசியின்மீது இத்தகைய கடுந்துவேஷத்தைக் காட்டும் அசுர குணத்தை உடைய....

என்று முடிப்பதற்குள், பாஸ்கரனல் பேசவே முடியாமல் விம்மலும் பொருமலும் மீறிக்கொண்டு வந்துவிட்டதால் "ஸார்! நான் வெளியே போய்வருகிறேன்" என்று கூறியவாறு சடக்கென யாருமே எதிர்பாராத விதம் எழுந்து போய்விட்டான். நாகரீக உத்யோகஸ்தராயினும், "ஸார்! ஸார்"என்று கூப்பிட்டும் பாஸ்கரன் நிற்காமல் சென்றதானது ஸேதுராமன் இதயத்தைப் புண்ணுக்கிவிட்டது.

அதே ஸமயம் ஒரு கவரை யாரோ கொடுத்துச் சென்றதாக ஸீதம்மாள் கொடுத்ததோடு, "இதென்ன காரியம் செய்துவிட்டீர்கள். அங்கிருந்து நாங்கள் வந்தவுடனே அகல்யாவிடம் இப்படித்தான் அசட்டுத்தனமாக நானும் ப்ரஸ்தாபித்தேன். அவள் எத்தனை அழுத்தந் திருத்தமாக பதில் சொன்னுள் தெரியுமா? தம்பதிகள் மனமொத்த அன்புடன் நேசிக்கையில் அந்த மூடத் தாயின் செய்கையை நாம் பொருட்படுத்தவே கூடாது என்ற ஞானம் எனக்கு நன்ருக உதித்துவிட்டது.

எனது சினேகிதி ஒருத்தித் தன் பெண்ணை ஒரு ஐ. ஏ. எஸ்ஸுக்குக் கொடுக்கும்போது சொன்னுள், 'பிள்ளை தானே எனக்கு ப்ரதானம். அவர் தாய் எத்தகைய ஊனமானல் எங்களுக்கென்ன வந்தது. அவளிடமா என் மகள் வாழப்போகிருள், என்றைக்கோ ஒருநாள் வந்தாலும் போயிற்று வராவிட்டாலும் போயிற்று என்ற தைரியத்திலுல்தான் கொடுக்கிறேன்' என்று என்னிடமே சொன்னுள். அதைக்கேட்டு நான் வியந்தேன். இப்படியும் சொல்வார்களா என்று நினைத்தேன். இத்தனைக்கும் அந்த பிள்ளையின் தாயார் இம்மாதிரி ராக்ஷஸி அல்ல. நல்லமனுஷி.... ஸரி... அதைப்பற்றி இப்போது நமக்கெதற்கு...

நமது அகல்யாவுக்கு இச்செய்கை தெரிந்திருந்தால் வருத்தப்படுவாளே....முதலில் கடிதத்தைப் படித்துவிட்டு நீங்கள் நேரே அவர்கள் வீட்டிற்குப் போய்வாருங்கள்" என்று கூறி உள்ளே சென்ருள். ஸேதுராமன் கடிதத்தைப் படிக்கவாரம்பித்தார்.

அன்புள்ள ஐயா! முன்பின்னறியாத நான் இக்கடிதத்தை எழுதுவதைக் கண்டு நீங்கள் ஆச்சரியப்படலாம். பொது நலனை உத்தேசித்து இதை எழுதுகிறேன். இன்றுமாலை உமதுவிலையிலா மாணிக்கம் போன்ற பெண்மணி அகல்யாவுக்கு சகோதர த்ரோகியாகிய

பாஸ்கரனுக்கும் நிச்சயதார்த்தமாகியதாக புரோகிதர் மூலமறிந்து மிகமிக வருந்துகிறேன். சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்கிறபடி சுருங்கச் சொல்லப் போனால் அந்த அயோக்யஸ்தன் அண்ணனின் மனைவியை......இந்த அனியாயம் தாளாமல்தான் அவனுடைய அண்ணனுக்கு இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்பு மூளைகூட சற்று கலங்கி இருந்தது. பிறகு சரியான வைத்யம் செய்ததில் குணமாகியது என்றாலும் நான் பயித்தியமாகவே இருக்கக்கூடாதா? எதற்காக எனக்குத் தெளியவைத்தாய், என்று தாயாரிடம் முட்டிக் கொண்டார்ன். அத்தகைய குடிகேடிக்கு இத்தகைய லக்ஷணமுள்ள பெண்ணைக் கொடுப்பதானது பாழுங் கிணற்றில் தள்ளுவதற்கொப்பாகி விட்டது என்பதைத் தெரிவிக்கிறேன்.

என்ற மொட்டை கடிதத்தைப் படிக்கப் படிக்க ஸேதுராமனின் நிலை கலங்கி வெயர்வை வெள்ளம் பெருகிவிட்டது. "ஸீதா....இங்குவா! இந்த அக்கினி மலையைப்பாரு" என்று கடிதத்தைக் கொடுத்துவிட்டு ஸோபாவில் சாய்ந்தார். இதைக் கேட்டதும் நடு நடுங்கியவாறு ஸீதம்மாள் கடிதத்தைப் படித்தாள். உலகமே தட்டாமாலை சுற்றுவது போல் அவளுக்குத் தோன்றியது.

அப்பழுக்கற்ற அன்பு வெள்ளத்தில் தனது உள்ளத்தை மிதக்கவிட்டிருக்கும் அகல்யாவின் பிம்பம் அவள் கண் முன் தோன்றியதும், ஐயோ இத்தகைய மனிதரிடமா அன்பு செலுத்தினேன், என்று அவள் பரிதாபப்படுவது போன்ற ஒரு தோற்றமும் உண்டாகி வதைத்தது.

அதே சமயம் டெலிபோன் மணியடித்ததும் ஸேதுராமன் ரிஸீவ் செய்தார். ஹல்லோ...ஓ... அகல்யாவா என்னம்மா செய்தி....ஒன்றுமில்லையப்பா! அவர் அங்கு வந்திருக்கிறாரா?... அப்பா....தங்களையும் அம்மாவையும் கேட்டுக் கொள்கிறேன்...அவருடைய தாயாரைப்பற்றியோ! தமயனைப்பற்றியோ எதுவும் கேட்கவே வேண்டாம்பா. ஏற்கெனவே அவர் மனது உடைந்திருப்பதை நான் அறிவேன். அவர் மனம் நோகாதபடி பேசுங்கள்..............

ஸேதுராமனுக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. அகல்யாவின் அன்பு மனத்தின் துடிப்பு அவளுடைய த்வனியில் நன்றாகத் தெரிகிறது. இச்சமயம் இங்கு நடந்துள்ள விபரீதத்தை எடுத்துச் சொன்னால் அவள் மனம் எப்படியாகுமோ! என்ற எண்ணங்களில் குழம்பிப்போய் விட்டதால் அகல்யாவுக்குப் பதில் பேசவும் மறந்து, அவள் சொல்வதைக் கேட்டவாறு ஊமையானார்.

இதற்குள் ஸீதம்மாள் ஓடி வந்து ரிஸீவரைத் தான் வாங்கிக் கொண்டு..."அகல்யா' பூமா எப்படி இருக்கிருள். நன்ருகப் பேசுகிருளா! டாக்டர் வந்து மறுபடியும் பார்த்தாரா" என்று வார்த்தையை மாத்திப் பேசினுள். எனினும் அவளும் இந்த விஷயங்களைச் சொல்ல மனது துணியாமல் "அகல்யா! நீ பூமாவிடமிரு. நான் உனக்கு ஆகாரங் கொண்டு வருகிறேன்" என்று கூறி ரிஸீவரை டக்கென்று வைத்து விட்டாள்.

"உங்கள் மனது மிகவும் கலங்கி இருப்பதாகத் தெரிகிறது. இக்கடிதத்தை நீங்கள் நம்புகிறீர்களா !...இதைப் பற்றிக் குழந்தையிடம் தெரிவிக்கவே கூடாது என்பது என் தீர்மானம். பாஸ்கரன் எங்கே" என்ருள்.

"ஸீதா! என் தலை சுற்றுகிறது. என்னுல் இப்போது பேசவே முடியவில்லை. கடிதத்தைப் படித்த பிறகு என் மூளைக் குழம்பிச் சந்தேகச் சேற்றில் உழல்கிறது. நாம் இன்று மாலை கல்யாண விஷயமாய்ப் பேசிக்கொண்டிருக்கையில் பாஸ்கரன் மட்டும் ஏன் ஒருவருக்கும் தெரியாமல் மாடிக்குப் போய் அந்தப் பெண்ணிடம் பேசவேண்டும் என்பதை இப்போது நினைத்தால் எனக்கு ஏதோ ஒருவித மான சம்சயமே உண்டாகிறது. என்னவிருப்பினும் எல்லோரும் கீழே இருக்கையில் அந்தப் பிள்ளை மட்டும்....

என்று முடிப்பதற்குள் ஸீதம்மாள் இடைமறித்து, "நீங்கள் சொல்வது மிகவும் தப்பு. எந்த ஒரு விஷயத்தையும் ஆர அமர யோசித்து அலசி பார்க்காமல் பேசி விடுவது சரியல்ல என்பது என்னுடைய துணிபு. நாங்கள் போகும்போது கூடதான் அந்தப் பரதேசிப் பெண்ணை தன் மடியில் போட்டுக் கொண்டு-சிகிச்சை செய்தான். இவைகளை எல்லாம் விபரீத நோக்குடன் பார்க்கிறவர்கள் கூட ஆபத்தான நிலையின் சந்தர்ப்பத்தை உத்தேசித்துக் குற்றஞ் சொல்லமாட்டார்கள். அங்ஙனமிருக்கத் தாங்கள் மட்டும் இவ்வாறு சொல்வது எனக்கு உசிதமாகத்தோன்ற வில்லை. பெண்கள்தான் சந்தேகப் பிசாசு என்பார்கள். ஆண்கள் அதைவிட மோசமாக இருக்கிறதே. அந்தப் பிள்ளைக் கேட்டுக்கொண்டு வந்தால் என்னவாகும்?" என்று தன்னை மீறிய உணர்ச்சியுடன் படபடத்துக் கூறினுள். தம்பதிகளுக்குள் இதுவரையில் இத்தகைய பேச்சே நடந்ததில்லை. வெள்ளைத் துணியில் சாயம் ஒரு துளி பட்டது போலவே ஸேதுராமனின் இதயத்திலும் பட்டதேயன்றி சமாதானமாகவில்லை. மவுனமும் கலவரமுமே குடி கொண்டது.

மனத் துடிப்புடன் எழுந்து சென்ற பாஸ்கரனின் செவிகளிலே தன்னை ஸேதுராமன் அழைப்பது காதில் விழாமலில்லை. எனினும் எதனலோ அவன் கால்களும் மனமும் உள்ளே செல்ல மறுத்து விட்டன. அலைகாற்றில் அகப்பட்டுத் தவிக்கும் பஞ்சு போல் அவன் மனது தத்தளிக்கும் சங்கடத்தைச் சகிக்க முடியாது துடிக்கிருன்.

தன் வீட்டிற்குப் போகவும் மனம் வரவில்லை. மறுபடியும் ஆஸ்பத்ரிக்கே சென்று அகல்யாவிடம் தன் மனப் போராட்டத்தையும், தன் குடும்பத்தின் அவக்கேட்டையும் எடுத்துக் கூறி ஸேதுராமனின் மனமாற்றத்தையும் தெரிவித்துவிடவேண்டும். ஒருவேளை தன் பிதாவைப் போலவே அவளும் எண்ணி இருந்தால்....தவிர பெண்களுக்குத் தொட்டதெல்லாம் சந்தேகமாயிற்றே....நான் மன்னியிடம் நடந்து கொண்ட மாதிரியும், பேசிய விதமும் ஒருவேளை அவளுடைய இதயத்தில் வேறு விதமான புயலைக் கிளப்பி இருக்குமோ! அவ்வாறு ஒரு அதிர்ச்சி உண்டாகி இருந்தால்...

என்று ஏதேதோ தனக்குள் நினைத்துக் குழம்பிய படியே நேரே நர்ஸிங் ஹோமிற்கு வந்தான். எதனலோ உள்ளே போகவும் அகல்யாவைப் பார்க்கவும் அளவு மீறிய ஆவல் துடிதுடித்தபோதிலும் ஏதோ ஒரு பயங்கரம் பின்னுக்குத் தள்ளி வதைத்தது. மெல்ல சமாளித்துக் கொண்டு பூமா படுத்திருக்கும் அறை பக்கம் செல்கையில் வழியிலேயே கையிலே மருந்து பாட்டிலும் பிஸ்க்ருப்ஷனும் எடுத்துக்கொண்டு நர்ஸ் வேகமாக வருவதைக் கண்டதும் திடுக்கிட்டவாறு “நர்ஸ்....நர்ஸ்....பூமா எப்படி இருக்கிருர்கள்” என்று தனக்கு இயற்கையாக உள்ளக் கூச்சத்துடன் கேட்டான்.

சிறு வயது முதல் அனுவச்யமான வம்புதும்பு, பெண்களிடம் அரட்டையடித்து வீண் சச்சரவுகளை உண்டாக்கு வது முதலிய கெட்ட வழக்கங்கள் பிறவியிலேயே இல்லாதவனகையால் நர்ஸாக இருந்தால்கூட தனிமையில் நின்று பேச உள்ளம் கூசினன். நர்ஸின் முகமும் ஒருவிதக் கவலைக் குறியுடனேயே காணப்பட்டதால் சற்று தயங்கியவாறு...“என்ன நர்ஸ்.......அந்த பேஷண்டு எப்படி இருக்கிறது. கூட இருக்கும் அகல்யா அம்மாள் இருக்கிருர்களா?....பேஷண்டு தூங்குகிருரா....” என்று ஏதோ உளரியவாறு, அருகிலிருந்த நாற்காலியில் பயத்தின் வலிமையில் நிற்கமாட்டாது அமர்ந்து மேஜையில் கையை ஊன்றிக் கொண்டான். அவன் முகத்தில் களையே இல்லை.

"நர்ஸ், "ஸார்! கால் மணிக்கு முன்பு யாரோ ஒருவர் வந்து பார்த்தார். அதுவரையில் சற்று நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்த பேஷண்டை எழுப்பவேண்டாம் என்று நான் எத்தனை சொல்லியும் கேட்காமல் அவர் எழுப்பி விட்டார். எழுந்து கண்ணைத் திறந்து பார்த்த



உடனே, ஐயோ! என்று பெரியதாகக் கத்திக் கூச்சலிட்டு என்னென்னவோ பேசினார்கள். நான் நாடியைப் பார்த்தேன். படபடத்து விட்டதில் டாக்டரை அழைக்க ஓடினேன். அதற்குள் அம்மனிதர் ஏதோ பேசி பேஷண்டின் மனத்தைத் துன்புறுத்திவிட்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் இப்படியாகாது. அகல்யா வீட்டிற்குப் போய் வருவதாக இப்போதுதான் போனார்கள்" என்று தனது கொச்சை பாஷையில் சொல்வதைக் கேட்டு சகியாத பாஸ்கரன், ஒருவேளை தன் அண்ணன்தான் வந்திருப்பானோ! என்ற சந்தேகமும், பயமும் உண்டாகியதால் தடதடவென்று பூமா படுத்திருக்கும் விடுதிக்குச்சென்றான்.

காண்போர் உள்ளங்களை உருக்கும் பரிதாப நிலையில் பூமா கைகளைக் கூப்பியவாறு "கடவுளே! இந்த பாப ஜென்மத்தை இதோடு முடிக்கமாட்டாயா! இதுதான் உன் கருணை என்றால் பிறருக்கு ஒருவிதமான துன்பமும் இல்லாது காப்பாற்ற மாட்டாயா!" என்று கண்ணீர் பெருகக் கதறும்போது உடலே நடுங்குவதைக் கண்ட பாஸ்கரன்; "மன்னீ! மன்னீ! எப்படி இருக்கிறீர்கள். ஏதோ சொல்கிறீர்களே! என்ன விஷயம் இங்கு யாரோ வந்துவிட்டுப் போனார்களாமே யார் வந்தார்கள்?" என்று கேள்வியை அடுக்கடுக்காய் கேட்டான்.

பாஸ்கரனின் பின்னாலேயே வந்த நர்ஸ் மெல்ல சைகை காட்டி அழைத்து "ஸார்! மன்னிக்க வேண்டும். இந்த சமயம் பேஷண்டிடம் தாங்கள் இப்படி பேசி அதிர்ச்சியை அதிகப்படுத்தக் கூடாது. படபடப்பு அதிகமாகி திடீரென்று ரத்தக் குழாய் வெடித்து இதயம் நின்றாலும் நின்றுவிடும். ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்ளு என்று டாக்டர் சொல்லி இருக்கிறார்கள். தயவுசெய்து பேச்சுக் கொடுக்கவேண்டாம்" என்று மிகவும் மரியாதையாகச் சொன்னதும் கண்களைத் துடைத்துக்கொண்டு சற்று தூரத்தில் வந்து அமர்ந்தான்.

மனமோ கட்டுக்கடங்காத நிலையில் துடிக்கின்றது. அலை அலையாகச் சுருண்டு எழும்பி உடைந்து வதைக்கும் வேதனையைச் சகிக்காமல் குழம்பினான். ஏதோ ஒருவித தீர்மானத்திற்கு வந்தான். உடனே ஒரு காகிதத்தில் விருவிரு என்று எழுதினான். அதை மடித்துக் கவரிட்டு ஒட்டி அகல்யாவின் பெயருக்கு எழுதி அதை வைத்துக் கொண்டு ஒருமுறை பெருமூச்சுடன் பார்த்தான்.

18329

பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்

# அருணை

கர்ப்பாசயரோக நிவாரணி

ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ் 17.

AYURVEDASRAMAM (PRIVATE) LTD.
MADRAS-17.

## வை. மு. கோ. நாவல்கள்

ரூ. 4-8
வைதேகி (2 பாகம்)

ரூ. 4.
சாந்தியின் சிகரம்

ரூ. 3.
நிர்மலநீரோடை

ரூ. 2-8
மலர்ந்த இதழ்
வானக்குயில்
மதுரகீதம்

ரூ. 2-4
ஞானதீபம்

ரூ. 2.
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
அமுதமொழி
தெய்விக ஒளி
பாதாஞ்சலி
புனிதபவனம்
குணக் குன்று
ஜீவநாடி

ரூ. 1-12
அனாதைப்பெண்
புகழ்மாலை
கலாநிலயம்
சிலாசாசனம்
வீராங்கனை
அமைதியின்
அஸ்திவாரம்
கடமையின் எல்லை

ரூ. 1-8
பிரதிபலன்
பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
காலக்கண்ணாடி
ஜெயபேரிகை
நம்பிக்கைப்பாலம்
சுதந்திரப் பறவை
மகிழ்ச்சி உதயம்

ரூ. 1-4
கோபால ரத்னம்
க்ருபாமந்திர்
புதுமைக்கோயில்
வீரவஸந்தா

ரூ. 1-2
அபராதி

ரூ. 1.
வத்ஸகுமார்
ப்ரார்த்தனை
பிரதிக்ஞை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
மனத்தாமரை
தபால் விநோதம்
இனிய முரசு
ஆண்டவனின் அருள்
இந்திரமோஹனா

அணா 12
பக்ஷமாலிகா
ப்ரேமாச்ரமம்
தியாகமழை
அருணோதயம்
மனச்சாட்சி
குலதனம்
கருணை உள்ளம்
சந்திரகலாமாலை
தென்னாட்டு கல்யாண
முறைகள்

அணா 8.
உளுத்த இதயம்
கான கலா
தூய உள்ளம்
ஸௌபாக்யவதி
ப்ரபஞ்சலீலை
வெற்றிப்பரிசு
ரோஜா மலர்
தைரியலக்ஷ்மி

## வை. மு. ஸ்ரீ.

உதய சூரியன் 1-4
பெண்மணிக்கனல் 1-0
இருளில் ஒளி 1-4
தியாகபலி 0-12
ஐயந்திசிந்தனைகள் 1-8
கோதாஹ்ருதயம் 0-12

## வை. மு. பத்மினி

ஸ்ரீ க்ருஷ்ணார்ப்பணம்
ரூ. 1-8
பாலர் மோகினி
12 சிறு கதைகள் 1-0

## சுத்தானந்த பாரதி


காந்தி கீர்த்தனம் 3-8

## ப்ர. ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமி

ஸ்ரீவிஷ்ணு
ஸஹஸ்ர
நாமஉரை 1-0
அபூர்வ
ராமாயணம் 1-8

Jaganmohini (April 1958) Regd. No. M. 2210

ஏப்ரல் 14 முதல்




JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed & published by V. M. PARTHASARATHY at the JaganMohini Press, 26, Car St, Triplicane, Madras 5.